Registered as a News Paper in

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 03 திங்கட்கிழமை (20.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 020

## மேலதிக வகுப்பிற்கு சென்ற உயர்தர மாணவி மாயம்

(யாழ்ப்பாணம்)

மேலதிக வகுப்புகளுக்காக யாழ்ப்பாணம் செல்வதாகக் கூறிச சென்ற மண்டைதீவு மகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவியொருவரைக் கடந்த 15 ஆம் திகதி முதல் காணவில்லையென தாயார் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

6 ஆம் வட்டாரம், மண்டைதீவு என்னும் விலாசத்தில் வசித்து வரும் சிவனேசன் பேரணி (வயது-17) என்ற மாணவியே காணாமற் போயுள்ளதாக முறைபபாட்டில் தெரிவிக்கப்பட்டுளளது.

கடந்த 15 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு குறித்த மாணவி யாழ்ப்பாணத்திற்கு மேலதிக வகுப்பிற்காகச் செல்வதாகக் கூறிச் சென்றவர் பின்னர் வீடு திரும்பவில்லையெனத் தயார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## குறிகாட்டுவான் - கொழும்பு பேருந்து சேவை ஆரம்பம்



தீவக மக்களின் நலன்கருதி குறிகாட்டுவானிலிருந்து கொழும்புக்கான வடபிராந்திய இலங்கை போக்குவரத்து சேவையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

குறிகாட்டுவான் சந்தியிலிருந்து இச்சேவை நேற்றைய தினம் சுபநேரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அனலைதீவு, நெடுந்தீவு, நயினாதீவு உள்ளிட்ட பகுதிகளில்

(19) ஆம் பக்கம் பார்க்க...

### காணி, பொலிஸ் அதிகாரம் பெறுவதாகக் கூறி

# மக்களை ஏமாற்றக்கூடாது வடக்கு மாகாண சபை



### பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் இல்லையென நீதிமன்றத்தினால் கூறப்பட்டுள்ளது. அது மத்திய அரசுக்கு உரித்தான உரிமை. ஆகவே காணி, பொலிஸ் அதிகாரங்களை பெறுகின்றோம் என வடமாகாண சபை மக்களை ஏமாற்றக்கூடாதென இலங்கை தமிழரசுக் கட்சியின் உப தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட கிளையின் மாநாடு நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவித்ததாவது,

தென்னிலங்கைக் கட்சிகளுடன் இணைந்து தீர்வுத்திட்டம் தொடர்பில் கலந்தாலோசிக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் நினைக்கின்றார்கள். நாங்கள் பிரிவினையைக் கோருகின்றோம். வடக்கு, கிழக்கு இணைப்பை தனிநாடு கேட்கின்றார்கள் எனச் சிங்கள மக்கள் மத்தியில் கருத்து நிலவுகின்றது. ஆனால் நாங்கள் கேட்பது தனிநாடு அல்ல. அதிகாரப் பகிர்வே.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## புலிகள் மீதான தடை நீக்கம்; எதிர்த்து கையெழுத்து வேட்டை

ஐரோப்பிய ஒன்றியத்தினால் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை நீக்கியதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாக, இலங்கை மக்களின் கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கையொன்றை மக்கள் போக்குவரத்து சேவை அமைச்சர் சி.பி. ரத்நாயக்க நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## கூட்டமைப்பு அங்கத்துவ கட்சிகளை வன்முறையாளர்கள் எனக் கூறுவதா?

### முதல்வர் விக்கி மீது வெறுப்பை உமிழும் விநோ எம்.பி.



(வவுனியா)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள அங்கத்துவக் கட்சிகளை, வன்முறையாளர்கள், விரும்பத்தகாதவர்களென பொது மக்கள் மத்தியில் முதல்வர் விக்னேஸ்வரன் குற்றஞ்சாட்டுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதுடன், முதலமைச்சர் விக்னேஸ்வரனின் அண்மைக்காலக் கருத்துக்கள் எமக்கு சந்தேகங்களையும், வெறுப்பையும் ஏற்படுத்துவதுடன், இவ்வாறான கருத்துக்களுக்கு கையைக் கட்டிக் கொண்டிருந்தாலும், வாயைப் பொத்திக் கொணடிருக்க முடியாதென கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.விநோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அரசாங்கத்தின் கருத்திற்கும் முதலமைச்சரின் கருத்திற்கும் இடையில் என்ன வேறுபாடுகள் இருக்கின்றது.

(19) ஆம் பக்கம் பார்க்க...

## வடக்கிற்கான பயணத்தடை விரைவில் தளர்த்தப்படும்



### பிரித்தானியா நம்பிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்யும் போது பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதியைப் பெற வேண்டுமென தற்போது விதிக்கப்பட்டுள்ள தடை விரைவில் தளர்த்தப்படுமென தாம் நம்பிக்கை கொள்வதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதுவர் ஜோன்ரன்கீன் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு மாகாணத்திற்கு வெளிநாட்டுப் பிரஜைகள் பயணம் செய்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு விதித்துள்ள வரையறைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளோம்.

வடக்கு மாகாணத்திற்கான பயணங்கள் தொடர்பில் காணப்பட்ட தடை கடந்த 2011 ஆம் ஆண்டு நீக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

யுத்தத்தின் பின்னரான நல்லிணக்கத்திற்கு இந்த நடவடிக்கை முக்கியமானது.

மீளவும் வட மாகாணத்திற்கு பயணம் செய்வது தொடர்பில் கெடுபிடிகள் அதிகரித்துள்ளமை

(19) ஆம் பக்கம் பார்க்க...

## அகிம்சைப் போரில் குதிப்பது உறுதி




### மாவை தெரிவிப்பு

2015 ஆம் ஆண்டிற்குள் மக்களை இணைத்து அகிம்சைப் போரில் குதிக்கப் போவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெற்றது. அங்கு

(19) ஆம் பக்கம் பார்க்க...



# வேலணை பிரதேச செயலர் பிரிவில் திவிநெகும ஆறாம் கட்டம் இன்று

(வேலணை)

வேலணை தெற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 30 கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகளிலும் இன்று வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் 6 ஆம் கட்டம் ஆரம்ப விழா இடம்பெறவுள்ளது.

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் 6 ஆம் கட்ட ஆரம்ப விழாவானது இன்றைய தினம் வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் அல்லைப்பிட்டி கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த ஆரம்ப விழாவில் பிரதம விருந்தினராக தீவக பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுவினது தலைவரும், யாழ்.மாவட்டத்திற்கான ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) பிரதம விருந்தினராக கலந்துகொண்டு ஆரம்ப விழாவினைத் தொடக்கி வைக்கவிருக்கிறார்.

தீவகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் வீட்டுத்தோட்ட செய்கையினை ஊக்குவிக்கும் முகமாக மரக்கறி விதை வகைகள், தென்னம் கன்றுகள், மாமரக் கன்றுகள் உட்பட பயன்தரத்தக்கதான பழ வகைக்கன்றுகளும் நீண்ட காலத்திற்கு நிலைத்து நின்று பயன்தரத்தக்க மரக்கன்றுகளையும் மக்களிடம் கையளித்து எதிர்காலத்தில் இந்த கிராம எழுச்சிக்கான வழிவகைகளை மேற்கொள்ளத்தக்க வகையிலான மரக்கன்றுகளும் விநியோகிக்கப்படவுள்ளன. (05)

# வெள்ளைப்பிரம்பு தின ஊர்வலம்



வடமாகாண லயன்ஸ் கழகங்கள் இணைந்து ஏற்பாடு செய்த வெள்ளைப் பிரம்பு தின ஊர்வலம் நேற்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி வழியாக மருதனார்மடத்தில் அமைந்துள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்தை சென்றடைந்தது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் செ.மகாதேவா தலைமையில் நடைபெற்ற இந்த ஊர்வலத்தில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் இரண்டாவது ஆளுநர் வ.தியாகராசாவும் சிறப்பு விருந்தினராக லயன். ச.பத்மநாதனும் கௌரவ விருந்தின்ராக சுன்னாகம் போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி சமிந்தவும் கலந்து கொண்டார்கள்.

சுன்னாகம் வாழ்வக மாணவார்கள் மற்றும் பொது மக்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள்.

# மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல்

(யாழ்ப்பாணம்)

'மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல்' என்னும் செயற்றிட்டம் சேவாலங்கா அமைப்பினால் வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து இடம்பெற்று வருகின்றது.

இதன் முதல் அங்கமாக இரண்டு நாட்கள் கொண்ட தலைமைத்துவக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

வடலியடைப்பு இளைஞர் கழகத்திற்கான தலைமைத்துவக் கருத்தரங்கின் ஆரம்ப வைபவம் நேற்று முன்தினம் சங்கானை மேற்கு சனசமூக நிலைய மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேள தலைவர் ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சம்மேளனத்தின் பொருளாளரும் வடலியடைப்பு இளைஞர் கழகத்தின் இணைப்பாளருமான அ.ஜெபநேசன், சேவாலங்கா நிறுவனத்தின் பெண்கள் வலுவூட்டல் உத்தியோகத்தர் திருமதி ரஞ்சிதமலர் மற்றும் வளவாளர்களான நந்தகுமார் மற்றும் மணிவண்ணன், வடலியடைப்பு இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (48)

# விலங்கு விசர் நோய்க்கு இருநாட்களில் 73 பேருக்கு சிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த இரண்டு நாட்களில் 73 நோயாளர்கள் விலங்கு விசர் நோய்க்கான சிகிச்சை பெற்றுள்ளதாக அவ் வைத்தியசாலையின் விலங்கு விசர்நோய் சிகிச்சைப்பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் 47 பேர் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளதுடன், அதில் 14 பேர் புதிதாக நாய்க்கடியுண்டு சிகிச்சை பெற்றதாகவும், நேற்றைய தினம் இவ்வாறு 26 பேர் சிகிச்சை பெற்றுள்ளதுடன், அதில் 3 பேர் புதிதாக நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலை விலங்கு விசர் நோய் சிகிச்சைப்பிரிவு மூடியிருக்கும் பட்சத்தில் விலங்கு விசர்நோய் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களுக்கு 24 ஆம் இலக்க நோயாளர் விடுதியில் சிகிச்சை வழங்கப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# கல்லை விழுங்கிய 10 மாத குழந்தை மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழப்பு



மல்லாவி 4 ஆம் யுனிற் பகுதியில் 10 மாத பெண்குழந்தை கல்லை விழுங்கிய நிலையில் மூச்சுத்திணறி பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இப்பகுதியைச் சேர்ந்த லிகிதரன் தனுசியா என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, குறித்த குழந்தை தவழ்ந்து விளையாடிக்கொண்டிருந்த நிலையில் முற்றத்திலிருந்த சிறிய கல்லை விழுங்கியவுடன் மயக்கமடைந்துள்ளது. இதனைக்கண்ட பெற்றோர் குழந்தையை மல்லாவி வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக குழந்தை வவுனியா பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. எனினும் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மரண விசாரணையின் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (140)

# காணித்தகராறு கத்தி வெட்டில் முடிந்தது

## ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நாவாந்துறைப் பகுதியில் நேற்று காணித்தகராறு காரணமாக ஒருவர் கத்தி வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த எம்.ஜேசுதாசன் (வயது - 58) என்பவரே இவ்வாறு கத்தி வெட்டிற்கு இலக்காகியுள்ளார். மைத்துனருக்கும், மைத்துனருக்கும் இடையில் ஏற்பட்ட காணித்தகராறினால் ஏற்பட்ட மோதலின் காரணமாகவே இவர் கத்திவெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (பா)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2573 திகதி 18-10-2014

ஆங்கில எழுத்து: J

வெற்றி எண்கள் 59 64 68 70

போனஸ் இல: 57

ஜக்பொட் பரிசு ரூ.13,228,825/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 188998 | 20/- | 3,779,960/- |
| 2 இல | 13493 | 100/- | 1,349,300/- |
| 3 இல | 276 | 1,000/- | 276,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7491 | 40/- | 299,640/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 563 | 1,000/- | 563,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 13,228,825/- | - |
| 1 இல + போனஸ் இல | 8954 | 100/- | 895,400/- |
| 2 இல + போனஸ் இல | 428 | 500/- | 214,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 415 | 200/- | 83,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 19 | 1,500/- | 28,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 220652 | | 9,078,800/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.10.22 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 13,744,300/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3531)


# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளைத்தடுக்கும் முகமாக விசேட விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் பருத்தித்துறையில் இடம்பெற்றது.

பருத்தித்துறை நகரசபைத் தலைவர் சபா. இரவீந்திரன் தலைமையில் நகரசபை மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் யுத்தத்தால் காணாமற்போன பெண்கள் சங்கத்தலைவி விசாகதர்மதாச வளவாளராக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

மேற்படி பெண்கள் சங்கத்தினர் ஏற்கனவே தென்பகுதியில் இவ்வாறான கருத்தரங்குகளையும் விழிப்புணர்வுப் பேரணிகளையும் நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

# டெங்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து நேற்று ஒருவர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசர்லையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் மூவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (பா)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி
அருகாமை)
021 222 8680,
077 592 5088.

(C/3800)


# புதிய பேருந்து சேவை

பருத்தித்துறையிலிருந்து முல்லைத்தீவு கொக்கிளாய் பகுதிக்கு நேரடியான பேருந்து சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு சாலை பொது முகாமையாளர் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில், நீண்டகாலமாக இப்பிரதேசத்திற்கென பேருந்து சேவை இன்மையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுவந்த நிலையில் தற்போது இச்சேவை ஆரம்பிக்கப்படுவதால் மக்கள் நன்மையடைவார்கள். மேலும் பருத்தித்துறை கொக்கிளாய்க்கான சேவையில் அதிகாலை 5.15 மணிக்கும், காலை 10 மணிக்கும் என இரு சேவைகள் இடம்பெறவுள்ளதாக அவர் தெரிவித்தார். (140)

# பின்தங்கிய பிரதேச அபிவிருத்திக்கு ஒருங்கிணைந்து ஒத்துழைக்க வேண்டும்

## உபதவிசாளர் மகேந்திரன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் பங்கேற்பு திட்டத்தின் ஊடாகவே முன்மொழிவு தெரிவுகள் இடம்பெறவேண்டும். இவ்வாறான திட்டத்திற்கே வடமாகாண பிரதமர் செயலாளர் அலுவலகம் முன்னுரிமை வழங்கி நிதியுதவியளிக்கும்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை உபதவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் பங்கேற்பும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் எனும் தலைப்பில் உப தவிசாளர் சின்னத்துரை மகேந்திரன் மேலும் தெரிவிக்கையில்,

வலி.தென்மேற்கில் மக்கள் பங்கேற்பு திட்டத்தை சபை திட்டமிடல் அலகு பூர்த்தி செய்துள்ளது.

எனினும் சபை உறுப்பினர்கள் திட்டங்களை புதிதுபுதிதாக முன்வைக்கின்றனர்.

இவ்வாறு புதிதாக கொண்டுவரப்படும் எத்திட்டங்களும் ஆராயப்பட வேண்டும். வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மக்கள் பங்கேற்பு திட்டத்திற்கே முன்னுரிமை அளிக்குமாறு கோரியுள்ளார்.

எமது சபையால் கிராமரீதியாக தயாரிக்கப்பட்டு பிரதேச மட்டத்தில் தொகுக்கப்பட்ட மக்கள் பங்கேற்பு திட்டம் உள்ளது.

இத்திட்டத்தில் இருந்தே சபையின் உறுப்பினர்கள் எதிாவரும் நான்கு ஆண்டுகளுக்கான முன்மொழிவுகளை முன்வைக்கலாம். இதற்கு வெளியே இருந்து வரும் திட்டங்களை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

மக்கள் பங்கேற்பு பிரதேச மட்ட தொகுப்பு நூலை வலி.மேற்கில் உள்ள எந்த தனிப்பட்ட ஒரு பொது மகனும் பார்ப்பதற்கு அனுமதியுண்டு.

எனவே இன்னும் உள்ள சொற்ப 8 மாதங்களில் ஒருங்கிணைந்த முயற்சியில் சபை உறுப்பினர்கள் செயற்பட்டால் பல பயனுறுதி வாய்ந்த அபிவிருத்தி கருத்திட்டங்களை முன்மொழிந்து பிரதேச அபிவிருத்திக்கு வித்திடலாம்.

இதன் மூலம் இதுவரை அபிவிருத்தி செய்யப்படாத கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

### தீபாவளியை முன்னிட்டு

# "நாம் நண்பர்கள்" அமைப்பின் இரத்ததான முகாம்



"நாம் நண்பர்கள்" அமைப்பின் இரத்ததான முகாம் இரத்த வங்கிகளில் ஏற்பட்ட தட்டுப்பாட்டினை அடுத்தும் தீபாவளியை முன்னிட்டும் ஏற்பாடு செய்யப்பட்டது இவ் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது.

உயிர்காக்கும் உன்னத தானமாகிய இரத்ததானம் செய்ய ஆர்வமுள்ள பலர் இதில் கலந்துகொண்டு இரத்த தானம் செய்தனர்.

குறுகியகால அழைப்பில் இவ் இரத்ததானம் மேற்கொள்ளப்பட்டாலும் சுமார் 100 பேர் வரையில் குருதிக் கொடை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. சாதாரணமாக நடமாடும் குருதிக் கொடை நிகழ்வில் இவ்வளவு பேர் பங்கேற்பது குறித்து யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினர் மகிழ்ச்சி வெளியிட்டதோடு குருதிப் பற்றாக்குறையான நேரத்தில் குருதிக் கொடையினை ஏற்பாடு செய்த "நாம் நண்பர்கள்" அமைப்பிற்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர். அத்துடன் "நாம் நண்பர்கள்" அமைப்பினர் பூநகரிப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு 600 அப்பியாசக் கொப்பிகளை அன்பளிப்பு செய்துள்ளதுடன், வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக கிரிக்கெட் போட்டியொன்றையும் நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டு வறிய மாணவர்களுக்கான மகிழ்ச்சிப்படுத்தல் நிகழ்வுகளும் அன்பளிப்பு வழங்கலும் இடம்பெறவுள்ளதாக "நாம் நண்பர்கள்" அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (48)

# பேருந்தில் பணம் திருட்டு பெண்கள் மூவர் கைது

## கொடிகாமத்தில் சம்பவம்

கொடிகாமம் பேருந்தில் பயணித்த 44 வயதுடைய பெண்ணின் கைப்பையில் இருந்த 14 ஆயிரம் ரூபா பணத்தினை திருடிய குற்றச்சாட்டில் 3 பெண்கள் சாவகச்சேரி பொலஸாரினால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு ஆமர் வீதி, மானிப்பாய் வீதி மற்றும் கொடிகாமத்தினைச் சேர்ந்த 22, 23, 24 வயதுடைய பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீசாலை கிழக்கு பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து மீசாலைக்கு சென்றுள்ளார். பயணத்தின் போது அவருக்கு அருகில் நின்ற 3 பெண்கள் பணத்தினை திருடியுள்ளனர். பணத்தினை திருட்டுக் கொடுத்தவர் பேருந்தில் இருந்து இறங்கிய பின்னர் கைப்பையினை பார்த்த போது பணம் திருடப்பட்டுள்ளமை தெரியவந்தது. உடனடியாக அப்பெண் ஆட்டோவில் கொடிகாமம் பேருந்தினை பின்பற்றி சென்று அதனை மறித்து 3 பெண்களையும் விசாரணை செய்ததுடன்; சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் 3 பெண்களும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கையினையும் மேற்கொண்டு வருகின்றனர்.(25)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –11




பல கோணங்களில், பல முனைகளில், பல விதமான உபாயங்களில் திட்டமிடப்பட்ட முறையில் முயற்சிகளை மேற்கொண்டாலே இனப்பிரச்சினைக்கான தீர்வை எட்ட முடியும்.

இதற்கு அனைத்துச் சக்திகளையும் மதிக்கின்ற மனநிலையும் பண்பாடும் எமக்குத் தேவை.

இனவாத அமைப்புகளோடயும் கதைக்க வேணும்.

அரசாங்கத்தோடயும் பேச வேணும்.

எதிர்நிலைப்பாடு உள்ளவர்களோடயும் உறவாட வேணும்.

ஆதரவுச் சக்திகளோடு இணைந்து வேலை செய்ய வேணும்.

சர்வதேச சக்திகள், பிராந்திய சக்திகள், உள்ளூர்ச் சக்திகள், இணைவுச் சக்திகள் என்று ஒவ்வொரு தரப்போடும் வேலை செய்வதற்கான மனவிரிவோட, அது அதுக்கெண்ட வேலைத்திட்டங்களும் தந்திரோபாயங்களும் வகுக்கப்பட்டுப் பொருத்தமானவர்கள் அவற்றைச் செய்ய வேணும்.

இப்பிடிப் பொதுத்தளமொன்றில வேலை செய்தால்தான் கொஞ்சமாவது கவனிப்பைப் பெறலாம்.

இப்ப இருக்கிற மாதிரி வாற போற ஆட்களிட்டை எல்லாம் பிலாக்கணத்தை எத்தினை காலந்தான் வைச்சாலும் அது உருப்படாது.

இல்லாட்டில், இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ, ஜெனிவாவுக்கோ எத்தினை தடவைதான் காவடி எடுத்தாலும் ஒண்டும் நடக்காது.

இப்பிடி இதுவரையில எத்தினை காவடிகளை எடுத்திட்டம்? எத்தினை பேரிட்ட எவ்வளவு காலமாக பிலாக்கணம் வைச்சிட்டம்? ஏதாவது நடந்ததா?

பெரிய அழிவுகளும் கொடுமைகளும் நடந்தபோதெல்லாம் இரங்காத மனங்களா இனி இரங்கப்போகுது?

ஆகவே, நாங்கள் ஏட்டிக்குப்போட்டியாக இனவாதத்தைப் பேசாமல், வெளியாரை நம்பியிராமல், சொந்தப் புத்தியில், சொந்தக் காலில் நிண்டுகொண்டு ஒரு தீர்வைக் காணவேணும்.

அதுக்குத்தான் நாங்கள் ஒரு புதிய தொடக்கத்தைத் தொடங்க வேணும் என்கிறன்.

இந்தத் தொடக்கம், இந்த நாட்டில இருக்கிற ஏனைய சமூகங்களிட்ட ஒரு நெருக்கத்தையும் இணக்கத்தையும் உண்டாக்கக் கூடியதாக இருக்க வேணும்.

இதுக்கு அரசாங்கத்தை நம்பியிருக்கத் தேவையில்லை.

அரசாங்கத்தின்ரை நல்லிணக்கத்தில நம்பிக்கை இல்லையெண்டு சொல்லிக்கொண்டிருக்கிறதை விட்டிட்டு, அந்த முயற்சியில நாங்கள் – சிறுபான்மையினர் இறங்க வேணும்.

முதலில முஸ்லிம்களும் தமிழர்களும் உறவாகி – நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேணும்.

நாங்களே ஒரு மொழியைப் பேசுகிற சக சமூகமான முஸ்லிம் மக்களோட ஐக்கியமாகத் தயாரில்லை.

கிழக்கு மாகாணத்தவர்களுக்கும் வடக்கு மாகாணத்தவர்களுக்கும் இடையிலயே இன்னும் பல விசயங்களில பிடுங்குப்பாடுகள் இருக்கு.

வன்னிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலயே இன்னும் இழுபறிகள் இருக்கு.

இப்பிடியான பிரச்சினைகள் இருக்கும்தான். ஆனால், இதுகளுக்கு உரிய தீர்வைக் காணவேணும். இதுகளுக்கு மத்தியிலதான் புரிந்துணர்வையும் உறவையும் கட்டியெழுப்ப வேணும்.

இப்பிடி இருக்கிற பிரச்சினைகளைக் கட்டியெழுப்பாமல் அரசாங்கத்தில பிழையக் கண்டு பிடிக்கிறம் எண்டால், நாங்கள் இப்போதைக்கு உருப்படுகிற மாதிரி இல்லை.

அரசாங்கம் பிழைவிட்டால், நாங்கள் செய்யும் சரியான – முறையான காரணங்களால அரசாங்கத்துக்கே நெருக்குவாரத்தைக் குடுக்கலாம்.

அதாவது, புதிய பொறிமுறை ஒண்டைக் கையாளத் தொடங்கினால் சர்வதேச சமூகத்தின்ரை அக்கறையும் ஏற்படும்.

இந்தியாவின்ரை கரிசனையும் உண்டாகும்.

உள்ளூரில உள்ள சக்திகளிட்டயும் மாற்றங்களும் நம்பிக்கையும் ஏற்படும்.

இதுக்கெல்லாம் நிதானமும் ஆழமான அரசியல் அறிவும் தேவை.

இதுவரையிலும் பாடமாக்கி வைச்சிருக்கிற வாய்ப்பாடுகளை எல்லாம் குப்பைக் கூடையுக்குள்ள போட்டிட்டு நிதானமாக வாயைத்திறக்க வேணும்.

காயமும் வலியும் நிரம்பிய ஒரு சமூகத்தின்ரை பிரச்சினையைத் தீர்க்கிறதுக்கு பொறுப்பும் கடமை மிகுந்த உணர்வும் தேவை.

சும்மா வாயில வந்தபடி கதைச்சுக் கதைச்சுத்தான் – வாயால பீரங்கி அடிச்சுத்தான் – கிழிஞ்சு போயிருக்கிறம்.

ஆனால், எப்பிடியெல்லாம் கிழிஞ்சாலும் எங்களிட்ட ஊறிப்போன நாய்க்குணம் – ஏகப்பிரதிநிதிகள் நாங்கள் எண்ட பேய்க்குணமும் நாங்கள்தான் உலகத்திலேயே பென்னாம் பெரிய கெட்டிக்காரர் எண்ட மொக்குத்தனமும் – விட்டுப்போகேல்ல.

குப்புற விழுந்து மூக்குடைபட்டுப் போயிருக்கிறம்.

எண்டாலும் இன்னும் மீசையில மண் படேல்ல எண்டு சொல்லிக்கொண்டிருக்கிறம்.

இப்பிடியிருந்தால் அரசியல் தீர்வும் கிடையாது. அதிகாரப்பகிர்வும் கிடையாது. தனி நாடும் வராது. சுயாட்சி, சமஸ்டி எண்ட எதுக்குக் கிட்டவும் போகேலாது.

நம்பிக்கை என்பது புயல் காற்றில் துவண்டு விழும் மெல்லிய மலரல்ல அது அடிபெயரா இமயம் போன்றது. - காந்திஜி

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## த.தே.கூட்டமைப்பின் தந்திரம்!

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினதும் மற்றும் அதன் போஷகர்களான சில புலம்பெயர் சக்திகளினதும் முட்டாள்தனத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வெற்றிக்குப் பயன்படுத்திக் கொள்கிறாரா அல்லது அவர் வெல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இவர்கள் இப்படி முட்டாள்தன வீரமாக நடிக்கிறார்களா என்று இப்போது சந்தேகம் வலுப்படுகிறது.

இவர்கள் மகிந்தவோடு ஒன்றாக அமர்ந்து பேசுவதே பாவம் என்பது போலவும், ஜனாதிபதி வடக்கிற்குச் செய்யும் அபிவிருத்திகளெல்லாம் சிங்கள ராணுவத்தினருக்குச் செய்துகொடுக்கும் வசதிகள்தான் என்றும், புலிகளைத் தோற்கடித்த மகிந்தவைப் பழிவாங்குவது ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரேயொரு லட்சியம் என்பதாகவும் தமிழ்த்தரப்பு இனவாதத்தைக் கொடிகட்டிப் பறக்க விடுகிறார்கள்.

அது சிங்களத் தரப்பினரிடத்தில் மகிந்தவுக்கான ஆதரவுத் தளத்தை எப்பனும் இறங்க விடாமல் பார்த்துக் கொள்கிறது. ஜனாதிபதி முறைமையை மாற்ற வேண்டும் என்று தெற்கில் எழுந்திருக்கும் அலையையும் இந்தத் தமிழ்த் தரப்பினரது இனவாதப் பேச்சுக்களைப் பயன்படுத்தி வெகு சுளுவாக எதிர்கொள்கிறார் மகிந்த.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் தீவிரவாத நிலைப்பாட்டிலிருக்கும் புலம்பெயர் தமிழர்களும் தனிநாட்டுக்கான முயற்சிகளை முற்றாகக் கைவிட்டுவிட்டதை உறுதிப்படுத்தட்டும்... அடுத்த நாளே இந்த ஜனாதிபதி முறைமையை ஒழிக்க முதல் ஆளாக நானே தயார்" என்று வீரமாக முழங்கிவிட்டு அவர் போகிறார். சிங்களத் தேசியவாத வாக்குகள் அவருக்கு உறுதிப்படுத்தப்பட்டு விடுகிறது.

மறுபக்கம் இவர்கள் ஆட்சிமாற்றம் ஒன்றை நடத்திக் கொண்டு வரவிருப்பதாகச் சொல்லப்படும் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் நடக்கப் போகிறது என்று தெரிந்ததும் புலம்பெயர் தமிழர்களைச் சந்தித்து வடக்கு கிழக்குத் தமிழர்களின் ஆதரவைக் கேட்கச் செல்கிறார்.

ஏற்கனவே இந்தப் புலம்பெயர் குழுக்கள் நாடுகடந்த தமிழீழ அரசு என்றும், நாட்டிற்குள்ளே தனிநாட்டுப் புரட்சி விரைவில் வெடிக்கும் என்றும் ஒரு சுடலையும் நடக்காதது போல கனவு கண்டு அலம்பிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், ரணிலிடம் இவர்கள் யதார்த்தத்துக்குப் புறம்பான என்ன நிபந்தனைகளை விதிப்பார்கள் என்பதை சிங்கள சமூகம் ஏற்கனவே விளங்கிக் கொண்டிருக்கிறது.

எனவே ரணில் திரும்பி நாட்டுக்கு வருவதற்கு முன்பாகவே அவருக்கான சிங்கள வாக்குகள் சரிந்துவிடுகிறது. வந்து இறங்கியதும் நிலைமையை விளங்கிக்கொண்டு, தனது முட்டாள்தனத்தைச் சரிக்கட்டுவது போல, 13க்கு அப்பால் ஐ.தே.க ஒரு போதும் தீர்வைத் தராது என்று அவர் அவசர அவசரமாக அறிவிக்க வேண்டி வருகிறது.

இதற்குப் பிறகும் கொடுமை என்னவென்றால்... இந்த ரணிலை வைத்துக்கொண்டு ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வரும் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மறுபரிசீலனை செய்ததாகவோ, 13க்கு அப்பால் தீர்வு தரவே முடியாது என்று அறிவித்த தங்கள் சகாவைக் கண்டித்ததாகவோ எந்த செய்தியுமில்லை.

"ஏதோ அவர் தீர்வைத் தருவார் என்றா அவரை ஜனாதிபதியாக்க நின்னக்கிறோம்; இல்லையே... சும்மா ஒரு சேஞ்சுக்குத் தானே..." என்பதாகத்தான் கூட்டமைப்பினர் நடந்துகொள்கிறார்கள்.

தமிழ் மக்களுக்குத் தீர்வொன்றைக் கொண்டுவருவது இவர்களது நோக்கமில்லை என்பதும், சிங்கள அரசாங்கங்களைத் திட்டியபடி தாங்கள் தேர்தல்களில் வென்றுகொண்டிருப்பது தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரது தந்திரம், அபிலாஷை, அரசியல்நோக்கு மற்றும் பிறவும் எல்லாம் என்பதை நாங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

- ஆசிரியர்

# தயாராகிறது தேர்தல் வியூகம்
# அபிவிருத்திச் செயற்பாடுகளும் அதிகம்

(கொழும்பு)

தெற்கில் தேர்தல் களம் மெல்ல மெல்ல சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. தினசரி அலரிமாளிகையில் அரசின் செயற்றிட்டங்கள் தொடர்பாக கொள்கை விளக்கம் அளிக்கும் விசேட கூட்டங்கள் நடாத்தப்பட்டு வருகிறது. புதிய அணுகு முறையில் ஆளும் கட்சியின் தேர்தல் வியூகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் கொள்கைத்திட்டங்களுக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்புகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு. வழங்கியுள்ளார்.

பெரும்பாலான அமைச்சுக்களின் செயலாளர்கள் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பிரசார நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாக இந்தப் பொறுப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில், அரச ஊழியர்களை குழுக்களாக அலரி மாளிகைக்கு அழைத்து கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறன.

அரசாங்கத்தின் பெண்கள் பணியகத்தின் அதிகாரிகள் நாளை அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

## தீபாவளி வியாபாரம் சூடு வீதியோரம் முளைக்கும் கடைகள்

(சுன்னாகம்)

வலிகாமம் பகுதியில் தீபாவளி வியாபாரம் மும்முரமாக சூடுபிடித்துள்ளது. மருதனார்மடம் சந்தை மற்றும் மருதனார்மடத்திற்கும் மல்லாகத்திற்கும் இடைப்பட்ட கே.கே.எஸ். வீதியின் பல இட்ங்களில் வீதி ஓரங்களில் தீபாவளி கடைகள் போடப்பட்டிருப்பதால் மும்முரமாக வியாபாரங்கள் நடைபெற்று வருகின்றன. குறித்த பகுதியில் கடந்த சில நாட்கள் மழைக்கு மத்தியிலும் காலை மற்றும் மாலை வேளைகளில் அதிகளவிலான மக்கள் பொருட்கள் மற்றும் புதிய ஆடைகளை வாங்கிச் செல்வதைக் காணமுடிகின்றது.

## குடிநீர் விநியோகத்திட்டம் ஆரம்பிக்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணம்-கிளிநொச்சி குடிநீர் விநியோகத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி யாழ்ப்பாணம்-கிளிநொச்சி தண்ணீர் விநியோகம் மற்றும் சுகாதாரத் திட்டம் தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரான்கஸீ டி டிவலப்மன்ட் (Agence Francaise de Development (AFD) நிறுவனம் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றின் அனுசரணையுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

## அதிவேகப்பாதையில் நுழைவதில் சிரமம்
### வெள்ள அபாயம் காரணம்

(கொழும்பு)

தெற்கு அதிவேகப்பாதையின் நுழைவாயிலில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.அதேவேளை, ஜின், களு, மற்றும் நில்வள கங்கைகளின் நீர்மட்டம் அதிகரித்துக்கொண்டு வருவதனால், குறித்த கங்கைகளுக்கு இருமருங்கிலும் வசிக்கும் மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படி, நீர்ப்பாசன திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக காலி, களுத்துறை, யக்கலமுல்லை மற்றும் இமதுவயக்கலமுல்லை ஆகிய பிரதேசங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்று இரவிலிருந்து வெலிப்பன்னை நுழைவாயில் மற்றும் தெற்கு அதிவேக பாதையின் வெளியேறும் வழியும் வெள்ளத்தால் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## விடுதியில் ரகளை அமெரிக்க பிரஜை கைது

(கொழும்பு)

கொழும்பில் விடுதி ஒன்றில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்று கூறப்படும் அமெரிக்க பிரஜை ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விடுதி ஊழியர் கொள்ளுப் பிட்டி பொலிஸ நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து அவர் கைது [illegible] யப்பட்டார் என்றும், விடுதியின் சீ.சீ.ரீ.வி கமராவின் உதவியுடன் விசாரணைகள் இடம்பெற்று வருகிறன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## போலிநாணயத்தாள்கள் தெற்கில் அதிகம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் போலி நாணயத் தாள்கள் அதிக அளவில் உலா வருவது இப்போது கண்டறியப்பட்டிருக்கிறது.

கடந்த வாரம் கொழும்பு-காலி இடையே சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தில் ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் 104 ஐ கண்டெடுத்த அந்த பஸ்ஸின் நடத்துனர், அவற்றை காலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

எஸ் 60,303,244 இலக்கங்களுடைய [illegible]லி நாணயத்தாள்கள் 84 உம், எஸ் 86,83,100,5 இ[illegible]க்கங்களுடைய போலி நாணயத்தாள்கள் 20 உம் வைத்து சுற்றப்பட்டிருந்த, உரிமையாளர் இல்லாத பொதியையே நடத்துனர் பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

## நீர் மின்சார உற்பத்திக்கு இப்போது வாய்ப்பு அதிகம்

(கொழும்பு)

நீர் மின்சார உற்பத்தி அதிகரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 61 வீதம் வரை உயரவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் மொத்த மின் உற்பத்தியில் 40 வீதம் நீர் மின் உற்பத்தி என இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர், பொது முகாமையாளர் செனஜின் தஸாநாயக்கா குறிப்பிட்டுள்ளார்.

இப்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# நாணயத்தாள் கடத்தல் சூத்திரதாரி சிக்கினார்

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்றதாகக் கூறப்படும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

40,78,581 ரூபாய் பெறுமதியான நாணயத்தாள்களை கடத்த முயன்றபோதே இவர் கைதுசெய்யப்பட்டார்.

150 பஹ்ரேன் தினார், 6,500 யூரோ, 31,500 சவுதி ரியால், 400 குவைத் தினார், 2,000 கட்டார் ரியால், 8,000 சுவிஸ் பிராங், 180 ஓமான் ரியால் உள்ளிட்டவற்றை இவரிடமிருந்து சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியதாக சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

தெஹிவளையைச் சேர்ந்த 48 வயதான இவர், டுபாய்க்கு புறப்படவிருந்தபோதே கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# இன்று பொன்விழா கொண்டாடும் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் எமது கொழும்புத்துறைக் கிராமத்துச் சிறார்கள் வெகு தொலைவில் சென்று கல்வி பயில்வதைக் கண்ட சைவப் பெருமக்களின் நன் முயற்சியினால், ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான காணியில் அமரர் வி.முத்தையா அவர்களின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலைக்கு யா/கொழும்புத்துறை கிழக்கு அ.த.க. பாடசாலை எனப் பெயரிடப்பட்டது. அமரர் இரா. செல்வராசா அவர்களைத் தலைமை ஆசிரியராகக் கொண்டு, மூன்று ஆசிரியர்களுடனும், 114 மாணவர்களுடனும் அரச பாடசாலையாக 1964.01.06 முதல் செயற்படத் தொடங்கியது. இப்பாடசாலை அவ் ஆண்டு இறுதியில் கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இக்காலப்பகுதியில் இப்பாடசாலையில் 01 - 08 வரை வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

ஆரம்பத்தில் சிறு பாடசாலையாக இயங்கிய இப்பாடசாலையில், பிள்ளைகளின் தொகை அதிகரிக்க அதிகரிக்க கட்டிடங்களும் அதிகரிக்கப்பட்டன. புதிய கட்டிடம் அமைக்க 10 பரப்புக்காணி சுவீகரிக்கப் பட்டது. Reference No.1257 (J/64/65D66) 30.10.1964 இல் பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. காலம் செல்லச்செல்ல அதிபர், ஆசிரியர்களின் முயற்சியினால் மாணவர்களின் தொகை மேலும் அதிகரித்தது. 1967 இல் ஆசிரியர் தொகை 08 ஆகவும், மாணவர் தொகை 215 ஆகவும் அமைந்தது. அதிபர் இடமாற்றத்தை தொடர்ந்து 1968 இல் திரு. அ. செல்லத்துரை அவர்கள் அதிபராக பாடசாலைப் பொறுப்பை ஏற்றார். அப்போது மேலும் 10 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டது. காலத்திற்குக் காலம் ஏற்பட்ட தேவைகளிற்கேற்ப பெற்றோரினதும், அரசாங்கத்தினதும் உதவியுடன் வகுப்பறைகள் விஞ்ஞான அறைகள் போன்றவை கட்டப்பட்டன.

அரசாங்கத்தின் கல்வித் திட்டங்களை ஏற்று, சிறந்த முறையில் இப்பாடசாலை பல வழிகளிலும் முன்னேற்றம் கண்டு திகழ்ந்தது. 12.05.1972 இல் கௌரவ கல்வியமைச்சர் அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து, பாடசாலையின் தேவைகள் நிறைவேற்றப்பட்டன.

1973இல் மாணவர் தொகை அதிரித்தமையால் க.பொ.த. (சா/த) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டன. இதே ஆண்டில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உதவியினால் விஞ்ஞான அறை கட்டப்பட்டது. 1974 இல் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் முதன்முறையாகத் தோற்றினர். அவ் வாண்டே பாடசாலை க.பொ.த (சா/த) பரீட்சை நிலையமாக செயற்படத்தொடங்கியது. 1976 இல் மாணவர் தொகை 400 க்கு மேல் அதிகரிக்க, ஆசிரியர் தொகை 19 ஆக உயர்ந்தது. இதனால் இடப் பற்றாக்குறை ஏற்பட 60'x 20' கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. பாடசாலையின் இரு பக்கங்களிலும் சுற்றுமதில் இக்காலப்பகுதியில் கட்டப்பட்டது. பாடசாலை விளையாட்டுப் போட்டி, சமய விழாக்கள், நடன, நாடகப் போட்டிகள் என்பவற்றில் பங்கு பற்றி மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர்.

1988 இல் மாணவர் தொகை 508 ஆக அதிகரிக்க மேலும் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது. இக்காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றிய திரு.க.தங்கராஜா அவர்களின் முயற்சி காரணமாக மேலும் 60'x 20" புதிய கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. 1990 இல் பாடசாலை கீதம் திருமதி.யோ. மகேந்திரன் அவர்களால் இயற்றப்பட்டு, செல்வி சி.சர்வலோகேஸ்வரி அவர்களால் இசையமைக்கப்பட்டது. பாடசாலை இலட்சினையும் "கற்றனைத் தூறுமறிவு" என்னும் மகுட வாக்கியமும் இக்காலத்தில் ஆக்கப்பட்டன. பின்னர் திருமதி ப.அன்னலிங்கம் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்று திறம்பட நடாத்தினார். 1995இல் யாழ் குடாநாட்டு மக்கள் இடம்பெயர நேரிட்டது. அதிபர் அவர்களின் தளராத முயற்சியினால் பாடசாலை யா/நாவற்குழி மகாவித்தியாலத்தில் தற்காலிகமாக இயங்கியது. யாழ் குடாநாட்டிற்கு மக்கள் மீளக் குடியமர்ந்தவேளை எமது கிராம மக்களும் மீளக் குடியமர்ந்த காரணத்தால் மீண்டும் எமது பாடசாலை வழமையான இடத்தில் செயற்படத் தொடங்கியது. இக்காலப் பகுதியில் பாடசாலைத் தளபாடங்கள், ஆவணங்கள் என்பன தொலைந்தும், சேதமடைந்தும் போயின. தளபாடங்கள் திருத்தப்பட்டு பாடசாலை தொடர்ந்தும் இயங்கியது.

01.10.1998 இல் முன்னாள் அதிபர் திருமதி.ப.அன்னலிங்கம் இடமாற்றம் பெற்றுச் செல்ல, திரு.மு. மகேந்திரன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றார். 1999 இல் தரம் 1 மாணவர்களுக்கான செயற்பாட்டறை அமைக்கப்பட்டது. மேலும் தரம் 6 - 10 வரை செயற்பாட்டறை அமைப்பதற்கும், தரம் 2 இற்கான செயற்பாட்டறை அமைப்பதற்குமான ஆரம்ப வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கொழும்புத்துறைப் பிரதேச மக்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாக பாடசாலை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கியது. 15.03.2000 இல் இப்பிரதேச மக்கள் சொந்த இடத்திற்கு மீளக் குடியமர்ந்தபடியால் பெற்றோர்களின் வற்புறுத்தலின் பேரில் பாடசாலையும் நிரந்தர இடத்திற்கு மாற்றப்பட்டது. பின்பு 11.05.00இல் மீண்டும் யாழ் நகரில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக இப்பிரதேச மக்கள் நவாலிக்கு இடம்பெயர்ந்து செல்ல, பாடசாலையும் நவாலி YMCA கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கியது. பின்னர் வலயக் கல்விப் பணிமனையின் பணிப்புரைக்கு அமைய பாடசாலை 02.04.01 தொடக்கம் யா / கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் மூன்றாம் மாடியில் தற்காலிகமாக இயங்கி வந்தது. அதிபர், ஆசிரியர்களின் விடாமுயற்சியின் காரணமாக பாடசாலை இடம் பெயர்ந்தும் கூட மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் திறம்பட நடைபெற்று வந்தன.

அதன் பின்னர் யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இயங்கிய எமது பாடசாலை வலயக்கல்விப் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைய யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தொகுதியில் இயங்கியது. பின்னர் பாடசாலையின் கட்டடங்கள் புவுணு நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டு பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

2010ஆம் ஆண்டில் பாடசாலை அதிபர் இடமாற்றம் பெற்றுச்செல்ல 2010.06.30 இல் திரு.ந. தயாளன் அவர்கள் பாடசாலையைப் பொறுப்பேற்றுக்கொண்டார். அதன் பின்னர் 9 ஆண்டுகளாக நடைபெறாது இருந்த பரிசளிப்பு நிகழ்வினை நடாத்துவதனை மையமாகக் கொண்டு பாடசாலைக்கான சமூக வலைத்தளப்பக்கம் உருவாக்கப்பட்டு உலகெங்கிலும் பரந்து வாழும் பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என்போர் ஓர் அணியாக்கப்பட்டனர். அதன் பின்னர் பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற்றது. அன்றைய தினம் 2012ஆம் ஆண்டு பாடசாலையின் முன் முற்றத்தில் சரஸ்வதி சிலை ஸ்தாபிக்கப்பட்டு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி.வ.சிவபாலனால் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்த காலப்பகுதியில் பாடசாலைக்கான சமூகப் பங்களிப்புக்கள் அதிகளவு கிடைக்கத் தொடங்கின. 2013ஆம் ஆண்டு பரிசளிப்பின் பின்னர் பாடசாலை அன்னையின் பொன் விழா நிகழ்வுகளை மையப்படுத்திய வகையில் பழைய மாணவர்களிடம் பல செயற்றிட்டங்கள் முன் வைக்கப்பட்டன. அவற்றினைப் பழைய மாணவர்களும் பாடசாலையின் நலன் விரும்பிகளும் ஆர்வத்துடன் முன்னெடுத்ததன் காரணமாக விஞ்ஞான ஆய்வு கூடம், ஆரம்பப் பிரிவு வகுப்பறை என்பவற்றின் பண்புத் தரவிருத்திக்காக முறையே சீற் அடித்தும், அலுமினியக் கண்ணாடிச் சட்டமிடப்பட்டும் விருத்தியாக்கப்பட்டன. பாடசாலைக்கு ஒரு நூலகம் அமைக்கப்பட்டது. சங்கீத அறை, பாடசாலை அலுவலகம் என்பன நவீன முறையில் புனரமைக்கப்பட்டன. மேடை புதிதாக வடிவமைக்கப்பட்டது, பிரார்த்தனை மண்டபம் புனரமைக்கப்பட்டது. கணனி அறை உருவாக்கப்பட்டு மாபிள் பதிக்கப்பட்டது. சிறுவர் முற்றப்பகுதியில் கற்றல் கூடம் ஒன்று அமைக்கப்பட்டது. பாடசாலையின் நுழைவாயிலில் வரவேற்பு வளைவு அமைக்கப்பட்டு பாடசாலையின் பெயர் சில்வர் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டது. அழகிய நுழைவாயில் கதவு அமைக்கப்பட்டது. நுழைவாயில் நடைபாதைக்கு அழகுக்கல் பதிக்கப்பட்டது. இவை தவிர கற்றல் உபகரணங்கள் என்ற வகையில் மல்ரி மீடியா இயந்திரம், போட்டோக் கொப்பி இயந்திரம் வயலின், தபேலா, மிருதங்கம், ஆர்மோனியம், பான்ட் இசை வாத்தியக் கருவிகள் என்பன பெற்றுக்கொள்ளப்பட்டன. இது மட்டுமன்றி அமரர் தம்பு நடேசு ஞாபகார்த்தப் புலமைப்பரிசில் நிதியமும் உருவாக்கப்பட்டு கற்றலுக்கான ஊக்கம் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு (2014) பாண்ட் வாத்திய அணியுருவாக்கப்பட்டமை ஒரு பெருமைக்குரிய விடயமாகவுள்ளது. பாடசாலை அதிபர் அலுவலகம் மாபிள் பதிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டதுடன் அலுவலகம் 5S திட்டத்துள்ளும் கொண்டு வரப்பட்டது. பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் தனது பணியினை செவ்வனே ஆற்றிவரும் எமது பாடசாலை அன்னையின் புகழ் வரலாற்றில் என்றும் இடம் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய எண்ணங்களுடன் பாடசாலை அன்னையின் பணிகள் சிறப்புடன் தொடர்கின்றன.

**விழாக் குழு**
**பாடசாலைச் சமூகம்**



# சர்வதேச போதை வர்த்தகம் இலங்கையர் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

சர்வதேச ரீதியில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இரண்டு இலங்கையர்களும் இந்திய பிரஜை ஒருவரும் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுடில்லி போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் சென்னை பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றி வளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 17 கிலோகிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னை பூந்தமல்லி பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து சந்தேகநபர்களால் போதைப்பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

# ஐரோப்பிய ஒன்றிய நடவடிக்கையால் இலங்கையில் பிரதிபலிப்பு இருக்காது

## தடைநீக்கம் குறித்து கோத்தாபய தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கிய போதிலும், இலங்கையில் மீண்டும் புலிகளின் செயற்பாடுகளுக்கு இடமளிக்கப் படாது என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமை குறித்து, சிங்கள பத்திரிகையொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள கோத்தாபய ராஜபக்ச, நாட்டில் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்கப் போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் கொடூரமானவர்கள் என்பதனை உலகிற்கு எடுத்துரைக்க குறுகிய அரசியல் நோக்கங்களைக் களைந்து அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளுக்கு, நாடு என்ற ரீதியில் அனைவரினதும் ஒத்துழைப்பு அவசியமாகிறது.



ஐரோப்பாவில் புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டாலும், இலங்கையில் ஈழக் கோட்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்கப்பட மாட்டாது என கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு தாமதமின்றி தீர்வுகாண திட்டம்

## நாடளாவிய செயற்றிட்டம் நாளை ஆரம்பம்

நாடு முழுவதுமுள்ள விவசாயிகளின் பிரச்சினைகளை அடையாளங்கண்டு விரைவான தீர்வு வழங்கும் நோக்கில் விவசாயிகளுடனான சந்திப்பின் ஆரம்ப நிகழ்வு நாளை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் ஆரமபமாகவுள்ளது.

கமத்தொழில் அமைச்சினால் ஆரம்பிக்கப்படும் விவசாய சந்திப்பு நிகழ்வானது நாட்டின் அனைத்து விவசாய கேந்திர நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் நடைபெறவுள்ளது.

கமத்தொழில் தொடர்பாடல் அதிகாரிகள் முன்வைக்கும் முன்மொழிவுகளை செயற்படுத்துவதை விடவும் அனுபவம்மிக்க விவசாயிகளின் முன்மொழிவுகள் பலனளிக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்விசாயிகள் சந்திப்பின் போதே விவசாயிகள் அவர்களது கருத்துக்களை முன்வைக்க முடியும். அதேபோல் நடைமுறைப் படுததப்படும் திட்டங்களின் குறைநிறைகளையும் சுட்டிக் காட்ட முடியும். இச்சந்திப்பின் போது விவசாய சங்கங்களுக்கு தகவல் சேகரிப்பு விண்ணப்பம் வழங்கப்படும்.

அதனூடாக இச்சங்கங்கள் மற்றும் மாவட்ட விவசாய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இவ்வாண்டுக்கான விவசாய வாரம் மற்றும் விவசாய கண்காட்சி நிமித்தம் மாத்தறை மாவட்டத்தின் அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் 650 சந்திப்புக்களை கமத்தொழில் அமைச்சு மேற்கொண்டது. அம்முயற்சி வெற்றியடைந்ததை அடுத்தே நாடு தழுவியரீதியில் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்த தீர்மானித்ததாக அமைச்சு மேலும் தெரிவித்தது.

கமத்தொழில் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அமைசசின் செயலாளர் ஆர்.எம்.டி.பீ. மீகஸ்முல்லவின் மேற்பார்வையில் இச்சந்திப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இம்முயற்சிக்கு விவசாய திணைக்களம்- ஹதபிம அதிகார சபை- அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம்- விவசாய கொள்கைச் சபை- ஹெக்டர் கொப்பேகடுவ நெல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் - தேசிய உணவு அபிவிருத்திச் சபை - தேசிய பசளை செயலாளர் காரியாலயம்- வரையறுக்கப்பட்ட இலங்கை பசளை கூட்டுத்தாபனம்- வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் பசளை கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திருமலை மாணவர் படுகொலை சாட்சிகளுக்கு அழைப்பாணை

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு 5 மாணவர்கள் கொல்லப்பட்ட வழக்குத் தொடர்பாக 3 சாட்சிகளைத் தேடி வருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுவுக்கு சமர்ப்பித்த ஆவணத்திலேயே இதனை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்த மூவருக்கும் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை நீதிமன்றின் பதிவாளர் இது குறித்து மின்னஞ்சல் ஒன்றை அனுப்பியுள்ள போதிலும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது. 2006 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை இடம்பெற்ற வேளை வெளிவிவகார அமைச்சினூடாக சாட்சிகளை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட்து. விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் அரசாங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

# கொழும்பில் சுற்றாடல் மாநாடு

சுற்றாடல் மற்றும் வனம் தொடர்பான சர்வதேச மாநாடு 2014 இம்மாதம் 24 - 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சிறிஜயவர்தன பல்கலைக்கழத்தினால் நடாத்தப்படும் இச்சர்வதேச மாநாட்டில் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் தொழில்நுட்பம் மற்றும் வளவாளர் வசதிகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருவ மழையால் பாதிப்பு இதுவரை 2,435 பேருக்கு

(கொழும்பு)

கடும் மழை காரணமாக அனர்த்தங்களை எதிர்நோக்கியுள்ள நான்கு மாவட்டங்களில் 2,435 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காலி, மாத்தறை, களுத்துறை மற்றும் குருநாகல் ஆகிய மாவடடங்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிபிலி தெரிவிக்கின்றார்.

இதேவேளை, கிங், நில் வலா, மற்றும் களு ஆகிய கங்கைகளின் நீர்மட்டம் அதிகரிததுள்ளதாக நீர்பாசன திணைக்களத்தின பணிப்பாளர் நாயகம் பதரா கமலதாச குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக குறித்த பகுதியிலுள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் அவர் கூறியுள்ளார்.

நிலவும் வானிலைக் காரணமாக ஏற்படக்கூடிய மண்சரிவு மற்றும் மண்மேடு சரிந்து விழுதல் என்பன தொடர்பில் மலையக மககளை அவதானத்துடன் செயற்படுமாறு தேசிய கட்டட ஆய்வு நிலையம் தெரிவிக்கின்றது.

இதனால் ஏற்படவுள்ள அனர்த்தததை தவிர்க்க இயலாத போதிலும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள முடியும் என நிலையத்தின் மண்சரிவு எச்சரிக்கை முகாமைத்துவ பிரிவின் சிரேஷ்ட புவியியல் நிபுணர் காமினி ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்றார்.

மேலும் காலி மாவட்டத்திற்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு எசசரிக்கை நேற்று நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# புலிகள் மீதான தடை நீக்கம் எதிர் விளைவுகளை மதிப்பீடு செய்கிறோம்



## ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் தெரிவிப்பு

புலிகள் மீதான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கிய பின்னர் இலங்கையில் ஏற்பட்டுவரும் எதிர் விளைவுகளை மதிப்பீடு செய்து வருகிறோம் என்று இங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டேவிட் டேலி தெரிவித்தார். பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும்போது அவை அந்த நாட்டின் சட்டத்திற்குட்பட்டதாகவும், அதனை பின் பற்றுவதாகவும் அமையவேண்டும் என இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுவர் டேவிட் டேலி குறிப்பிட்டுள்ளார.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ஐரோப்பிய நீதிமன்றம் புலிகள் மீதான தடையை இரத்துச் செய்தமை தொடர்பாக மிக உன்னிப்பாக ஆராய்ந்துவருகிறோம், சகலரினது கருத்துக்களை யும் செவிமடுத்த பின்னரே பதிலளிப்போம், இந்த தருணத்தில் எதனையும் செய்ய முடியாது. இது ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் சாதரணமான விடயம, ஐரோப்பிய ஒன்றியம் ஜனநாய கோட்பாடுகளின் அடிப்படையில் இயங்குகின்றது, நீதித்துறையும் அதன் செயற்பாடுகளும் சடடத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்,

ஐரோப்பிய ஒன்றியம், பயங்கரவாதத்தை எதிர்க்கின்றது, அதுவே அதன் நிகழ்ச்சி நிரலில் முக்கியமாக உள்ளது. இதற்கு எதிரான போராட்டத்தில் நாங்கள் பல நடவடிக்கைகளை எடுக்கிறோம். பயங்கரவாதத்திற்க்கு எதராகபோராடுவதற்கு அப்பால் அதற்கு எதிராக நாளாந்தம் நட வடிக்கைகளை எடுத்தவண்ண முள்ளோம்.


ஆனால் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் சட்டத்திற்குட்பட்டவையே. நீதிமன்ற தீர்ப்பை நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். அதனை தொடர்ந்து செய்வோம். இலங்கை, பிரிட்டன் அல்லது வேறு எந்த நாடாக இருந்தாலும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மிக அவதான மாகவே முன்னெடுக்க வேண்டும். என்ன நடவடிக்கைகளை எடுத்தாலும் அது சட்டத்திற்குட்பட்டதாக, அதனை பின்பற்றுவதாக அமையவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யுத்தத்தால் சொத்துக்கள் இழப்பு விபரம் கோருகிறது பாதுகாப்பு அமைச்சு

வடக்கு மாகாணத்தில் போரினால தமது காணி, வீடுகளை இழந்து இதுவரை குடியேற்றப்படாத மக்கள தொடர்பான விபரங்களை பாதுகாப்பு அமைச்சு திரட்டுகிறது. 1980 ஆம ஆண்டுக்கு பின்னர போரினால் பாதிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களிடம் இருந்து இதுதொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

தற்பொழுது குடியேற்றப்பட்டிருக்கும் காணிகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளுமாறும் அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது. காணி மற்றும் வீடுகள் தொடரபில் முறைப்பாடு செய்பவர்கள் தமது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மினனஞ்சல் முகவரி, கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலக பிரிவு மற்றும் மாவட்டம் ஆகிய விபரங்களையும் உள்ளடங்கிய விணணப்பப் படிவத்தை வடிவமைத்து அனுப்பி வைக்கவேண்டும்.

மேலும் இவற்றை உறுதிப்படுததும் ஆவணங்கள் இருக்கும் பட்சததில அவற்றையும் இந்தப் படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கோரியுள்ளது. விண்ணப்பங்களை பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, இலக்கம் 15/5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 03 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

புனித பரியோவான் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வின் போது... (எஸ்.பி)

# மடாலயத்தை சட்டரீதியாக பதிவு செய்ய ஆலயநிர்வாகம் ஒத்துழைக்க வேண்டும்

## தலைவர் கல்விக்காருண்யன் நாகரத்தினம் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

மாணிக்கவாசகர் மடாலயம் நல்லமுறையில் செயற்படுவதால் அன்பர்களின் நிதியுதவி எமக்குக் கிடைக்கிறது. மடத்தின் செயற்பாடுகளைப் பார்த்து உயில எழுதிவைத்துவிட்டு இறந்தவர்களின் நிதியைக்கூடப் பெறக்கூடியதாக உள்ளது. எனவே மடாலயத்தை சட்டரீதியாகப் பதிவு செய்வதற்கு ஆலய நிர்வாகம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது தலைமையுரை நிகழ்த்திய மடாலயத் தலைவர் கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

உள்நாட்டில் மட்டு மன்றி உலக அரங்கலும் மாணிககவாசகர் மடாலய அன்னதான சபையின் செயற்பாடுகள் பற்றி சிறப்பாகப் பேசப்பட்டு வருவது காரைநகர் மக்கள் அனைவருக் கும் பெருமைதரும் விடயமாகும்.

இன்று மடாலயத்தின் பெயரில் 91 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி இருக்கிறது. விரைவில் அது ஒரு கோடியாக மாறும். இந்த நிதி பாதுகாக்கப்படவேண்டும். வருங்காலச் சந்ததியினர் நிதி சேகரிபார்களோ தெரியாது. எனவே இந்துகலாசாரத்திணைக் களத்தில் மடாலாயத்தைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஈழத்துச்சிதம்பரத்தில் திருவெம்பாவை பத்து நாள் உற்சவத்தின்போதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. பங்குனி மகோற்சவம், அம்பிகையின் ஆடித்திருவிழா விசேட தினங்கள், மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இம் மடாலயத்தில் அன்னதானம் சிறப்பாக நடைபெற புரவலர் சிவஞானம் பெரிய மண்டபம் ஒன்றைக் கட்டித்தந்திருக்கிறார். வருடாவருடம் அனுராதபுரத்திலிருந்து லொறியில் மரக்கறி வகைகளை அனுப்பிவைப்பார், அவருக்கும் அன்னதானத்திற்கு நிதியுதவி, பொருளுதவி வழங்கிவரும் அன்பர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

இப்பொதுச் சபைக் கூட்டத்திற்கு பெருந்தொகையான அடியார்கள், அன்பர்கள் அங்கத்தவர்கள் வருகை தந்திருந்தனர். ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான ஆதீனகர்த்தாக்களான ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)

## மரக்கறிகளின் விலை குடாநாட்டில் அதிகரிப்பு

மரக்கறிகளின் விலை தற்போது குடாநாட்டில் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக்கள் அன்றாடம் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு பலத்த சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

பெரும்பாலான மரக்கறிகள் நூறு ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவதாகவும் மழைகாலம் தொடங்கிய பின்னர் கீரை ஒருபிடி 30 - 40 ரூபாவுக்கும், கத்தரிக்காய் கிலோ 100 - 120 ரூபாவுக்கும், புடோல் 140 - 150 ரூபாவுக்கும், பாகற்காய் 120 - 150 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (66)

## விபரம் கோரல்

(கரணவாய்)

கரவெட்டி கால் நடை வைத்தியர் அலுவலகத்தினால் கரவெட்டி பிரிவில் செயற்கை முறை சினைப்படுத்தலில் காளை மாடுகளுக்கான சுக்கிலம் பெறுவதற்கு கேள்விக் கொத்து விபரம் பண்ணையாளரிடம் கோரப்பட்டுள்ளது.

எனவே பண்ணையாளர்கள் விண்ணப்பப்படிவங்களை உடனடியாக பெற்று விபரங்களை பூர்த்தி செய்து வழங்குமாறு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (18)

# தொடர்மாடிக் குடியிருப்பு வீடுகளுக்கு குருநகரில் இலவச மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் புனரமைக்கப்பட்டுள்ள குருநகர் தொடர்மாடி குடியிருப்பில் அமைந்துள்ள வ்டுகளுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இலவசமின் விநியோகம் வழங்கப்பட்டுவருவதாக முன்னாள் யாழ். மாநகரசபை துணைமுதல்வர் துரைராஜா இளங்கோ (றீகன்) தெரிவித்துள்ளார்.

இந்த தொடர்மாடி குடியிருப்பில் உள்ள குடும்பங்களின் நன்மை கருதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே இந்த மாடிக்குடியிருப்புப்பகுதியில் உள்ள குடும்பங்களுக்கு கட்டம் கட்டமாக இந்த மின் இணைப்பு வழங்கப்பட்டுவருகிறது. இதன் கீழ் நேற்றுமுன்தினம் 61 குடும்பங்களுக்கு இலவச மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டதாக முன்னாள் யாழ்.மாநகரசபை துணை முதல்வர் றீகன் தெரிவித்துள்ளார். மேலும் குருநகர் தொடர்மாடிக் குடியிருப்பில் மொத்தம் 160 வீடுகள் அமைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# முன்பள்ளி மாணவர்களின் நலன்பேண வடிகட்டி வழங்கியது வேள்ட்விஷன்

முன்பள்ளி நிறுவனங்களின் மேம்பாட்டுக்காக வேள்ட் விஷன் நிறுவனம் குடிதண்ணீர் வடிகட்டிகள்ள வழங்கியுள்ளது. இதன் மூலம் முன்பள்ளி மாணவர்கள் சுத்தமான குடிதண்ணீரை பருகும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார். மேற்படி விடயமாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 14 கிராமங்களில் மக்கள் குடிதண்ணீர் இன்றி மிக கஷ்டமுறுகின்றனர். வேள்ட் விஷன் யாழ்.நிறுவனம் முதற்கட்டமாக குடிதண்ணீர் பவுசர் கொள்வனவிற்காக 15 இலட்சம் ரூபாவினை வழங்க முன்வந்துள்ளது.

வலி.மேற்கில் உள்ள 73 முன்பள்ளி பாடசாலைகளுக்கும் மாணவர்களின் நலன்கருதி புதிய குடிதண்ணீர் வடிகட்டிகளை வழங்கியுள்ளது. இச்சேவையை நாம் பாராட்ட வேண்டும். இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்த வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகத்தையும் இத்தருணத்தில் பாராட்டுகின்றேன் என்றார்.

## முரசின் இன்றைய பலன்



(20.10.2014 திங்கட்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 03 ஆம் திகதி.
துவாதசி / சித்தம்.
பூர நட்சத்திரம் மு.இரவு. 11.43 வரை. பின் உத்தரம்.
இராகு காலம் 07.32 - 09.02 வரை. சுபநேரம் 12.02 - 01.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வியாபார விருத்தியை முன்னிட்டு நடைமுறைக் கணக்கினை திறக்க எண்ணமிடல், நோயின் தாக்கத்தால் அவஸ்தைப்படநேரிடும். |
| ரிஷபம் | எதிரியின் தொல்லை அற்றுப்போதல், உதவிகேட்டு வந்தவருக்கு உதவ மறுத்தல். |
| மிதுனம் | உதவிக்காக நகை பணத்தைக்கொடுத்து மீளப்பெற முடியாது திண்டாடுதல், தற்காலிக பணி நிராந்தரமாக்கப்பட்டல். |
| கடகம் | இயந்திரக் கோளாறால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தல், ஒரு தலைப்பட்சமாக நடப்பதால் குடும்பத்தில் சச்சரவு ஏற்படல். |
| சிம்மம் | சவால்களுக்கு முகங்கொடுத்து பணிநிலையை மேம்படுத்தல், நிலுவையில் கணிசமான தொகை வந்து சேர்தல். |
| கன்னி | விவசாய நடவழக்கைகாக குத்தகைக்குக் காணி பெற எண்ணுதல். |
| துலாம் | சுகாதாரமுறைகளைப் பின்பற்றாததால் வர்த்தக நிலையத்திற்கு தடைவித்தல், உள்ளூரில் அரசபணி கிட்டும். |
| விருச்சிகம் | மனசங்கடங்களுக்கு ஆளாதல், கவலை அதிகரிக்கும், புதிய முயற்சியில் கால்பதித்தல். |
| தனுசு | கடனில் ஒருபகுதியைக் கட்டல், போக்குவரத்தில் சிக்கல்கள் ஏற்படும். |
| மகரம் | புதிதாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கான பயிற்சிக்கு சமூகமளித்தல், மின்சார நிலுவை அதிகரித்தமையினால் மின் இணைப்பு துண்டிக்தல். |
| கும்பம் | அனுமதியற்ற முறையில் வியாபாரம் செய்யமுயன்றதால் அவலப்படல், நாட்டின் எல்லையைக் கடக்க முற்படும் வேளை அவதானம் தேவை. |
| மீனம் | சட்டவிரோதமான பொருளைக் கொண்டு சென்றவேளை கைதாகும் நிலை, கொழும்பு செல்ல புகையிரத ஆசனப்பதிவு செய்வதில் கவனமெடுத்தல். |

# இறுதியில் மோதவேண்டும் அவுஸ்ரேலியா, இந்தியா

## உலகக் கிண்ணம் குறித்து பொண்டிங்



(சிட்னி)

எதிர்வரும் உலக கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்தில் அவுஸ்ரேலிய மற்றும் இந்திய அணிகள் மோதவேண்டும் என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.


நியூசிலாந்து, அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அவுஸ்ரேலிய, இந்திய அணிகளும் மோதுவதே சிறந்ததாக இருக்கும். இரு அணிகளிடமும் பலம் வாய்ந்த துடுப்பாட்ட வரிசை உள்ளது. இதில் அவுஸ்ரேலியா கோப்பையை கைப்பற்ற வேண்டும்.

உலககோப்பைக்கு முன்பு இந்திய அணி அவுஸ்ரேலியாவில் 4 டெஸ்டில் விளையாடுகிறது. அவுஸ்ரேலிய அணியின் 20 விக்கெட்டுகளைக் கைப்பற்ற இந்திய பந்துவீச்சாளர்கள் திணறுவார்கள். இதில் எந்த சந்தேகமும் இல்லை.

இந்தியாவின் துடுப்பாட்ட வரிசை சிறப்பாக இருக்கிறது. இந்த டெஸ்ட் தொடருக்கு முன்பு அணித் தலைவர் டோனி தனது தொழில்நுட்பத்தை மாற்றிக் கடினமாக்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவின் பெரும் பலமாக தற்போது ஹோலியே விளங்கி வருகிறார். அவருடைய துடுப்பாட்டத் திறன் அசாத்தியமானது. அவர் ஒரு சிறந்த் வீரர் என்பதில் ஐயமில்லை. ஆஸி. மண்ணிலும் அவர் சாதிப்பார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பெண்களுக்கான உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ்

# சிங்கப்பூரில் இன்று ஆரம்பம்



(சிங்கப்பூர்)

பெண்களுக்கான உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி சிங்கப்பூரில் இன்று ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இத்தொடரில் தரவரிசையில் முதல் எட்டு இடங்களில் உள்ள வீராங்கனைகள் மட்டுமே பங்கேற்க முடியும். இப்போட்டியில் மோதவுள்ள வீராங்கனைகளின் அட்டவணை நேற்று முன்தினம் நிர்ணயிக்கப்பட்டது.

இதன்படி வீராங்கனைகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டனர். ரெட் பிரிவில் நடப்பு சம்பியனும் முதல் நிலை வீராங்கனையுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், சிமோனா ஹலேப் (ருமேனியா), பவுச்சார்ட் (கனடா), இவானோவிச் (சேர்பியா) ஆகியோரும், வையிட் பிரிவில் 2ஆம் நிலை வீராங்கனையும், பிரெஞ் ஓப்பன் சம்பியனுமான மரிய ஷரபோவா (ரஷ்யா), விம்பிள்டன் சம்பியன் பெட்ரா கிவிடோவா (செக்குடியரசு), அக்னீஸ்கா ராட்வன்ஸ்கா (போலந்து), கரோலின் வோஸ்னியாக்கி (டென்மார்க்) ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

ஒவ்வொருவரும் தங்கள் பிரிவில் உள்ள மற்ற வீராங்கனைகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் முடிவில் இரு பிரிவிலும் முதல் இடங்களைப் பிடிக்கும் வீராங்கனைகள் அரையிறுதிக்கு தகுதி பெறுவர் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மே.தீவுகள் விலகல் மிகப்பெரிய இழப்பு

(புதுடில்லி)

இந்திய தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் அணி விலகியதால் எங்களுக்கு மிகப்பெரிய வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எல்லா வகையிலான பாதிப்புகளுக்கும் நாங்கள் இழப்பீடு கோரப் போகிறோம். அத்துடன் சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) கவனத்திற்கும் கொண்டு செல்வோம். வருங்காலத் தில் இது போன்று நடக்காதவாறு பார்த்துக் கொள்ளும்படி ஐ.சி.சி.யை வலியுறுத்து வோம் என இந்திய கிரிக்கெட் சபை யின் செயலாளர் சஞ்சய் பட்டேல் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையால் எதிர்காலத்தில் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான நேரடி போட்டித் தொடரில் நாங்கள் (இந்திய அணி) விளையாடுவது என்பது கடினமான ஒன்றாகும். இது போன்ற சிக்கலான சூழல் ஒரு போதும் நிகழாது என்று இனி மே.தீவுகள் கிரிக்கெட் சபை உறுதிமொழி அளித்தாக வேண்டும். ஆனாலும் தற்போதைய சூழலில் இந்திய அணியின் அடுத்த மே.தீவுகளுக்கான சுற்றுப்பயணம் திட்டமிட்டபடி நடக்க வாய்ப்பில்லை என்று தான் சொல்வேன். என்ன தான் ஊதிய பிரச்சினை இருந்தாலும், அவர்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்டபடி இந்த தொடரை முழுமையாக விளையாடி முடித்திருக்க வேண்டும். குறுகிய காலத்தில் இந்தியாவில் ஒரு நாள் தொடரில் விளையாட ஒப்புக் கொண்ட இலங்கைக்கு நன்றி. ஆனால் துரதிர்ஷ்டவசமாக டெஸ்ட் போட்டித் தொடர் நடத்த போதுமான கால அவகாசம் இல்லாமல் போய் விட்டது எனத் தெரிவித்தார்.

# இந்தியாவுக்கே அதிக வாய்ப்பு

## உலகக் கிண்ணத்தை வெல்ல

(சிட்னி)

அவுஸ்ரேலிய, நியூசிலாந்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றக்கூடிய அதிக வாய்ப்புள்ளதாக அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் அலன் போடர் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட்டில் இந்தியாவின் வாய்ப்புகள் பலமாக உள்ளன. முழு உடல் தகுதியுடைய இசாந்த் சர்மா அதில் முக்கியமான வீரராகத் திகழ்வார். காயமடையாமல் இருந்தால் இசாந்த் சர்மா இந்தியாவுக்கு ஒரு முக்கியமான வீரர், அவர் ஒரு நல்ல பந்துவீச்சாளர். அவுஸ்ரேலிய ஆடுகளங்களில் அவரால் சிறப்பாக வீச முடியும். டோனி ஒரு பலமான ஆளுமை மிக்க கப்டன். ஆனால் டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் இன்னும் முனைப்புடன் ஒரு தலைவராக செயற்படுவது அவசியம். இந்திய அணியில் சிறந்த வீரர்கள் உள்ளனர். இவர்களுடன் சரியான அணுகுமுறையைக் கையாண்டால், நிச்சயம் வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணியால் சிறப்பாக விளையாட முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் அணி அறிவிப்பு 3 புது முகங்கள் இணைப்பு

(அபுதாபி)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மூன்று புதுமுக வீரர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான இரு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் நாளை மறுதினம் டுபாயில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கான பாகிஸ்தான் அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் துடுப்பாட்ட வீரர் சோகைல், வேகப்பந்து வீரர் இம்ரான்கான், சுழற்பந்து வீரர் யாசிர்ஷா ஆகிய 3 புதுமுக வீரர்கள் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

அணி விபரம்: மிஸ்பா உல் ஹக் (கப்டன்), அகமட் ஷேசாத், ஆசாத் சபீக், யூனிஸ்கான், அசார் அலி, அதில், சோகைல், இம்ரான்கான், மொகமட் ஹபீஸ், மொகமட் தலிகா, ரசாத் அலி, சர்பிராஸ் அகமட் (விக்கெட் காப்பாளர்), ஷான் மசூத், தவ்பிக் உமர், யாசிர் ஷா, சுல்பிகார் பாபர்.

# வருகிறது இந்திய அணி

(கொழும்பு)

அடுத்த வருடம் இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இலங்கையில் நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதம் இலங்கை அணி இந்தியாவில் டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவிருந்தது. ஆனால் அடுத்தமாதம் இந்தியாவில் ஐந்து ஒருநாள் போட்டிகளில் பங்குபற்ற இலங்கை சம்மதித்துள்ள நிலையில் அடுத்த வருடம் இலங்கைக்கு இந்தியா விஜயம் செய்யவுள்ளதாக அவர் கூறினார்.

இந்திய அணியின் இலங்கை விஜயத்தின் போது ஒரு நாள் போட்டிகள் எதுவும் நடைபெறமாட்டாது எனத்தெரிவிக்கப்படுகிறது. இச்சுற்றுலாவின் மூலம் இலங்கைக்கு 7 - 8 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கும் எனவும் நிஷாந்த ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடர் விரைவில் நடைபெறவுள்ளதால் ஒரு நாள் தொடரில் மட்டுமே அடுத்த மாதம் மோதவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டின் பின் இந்தியாவில் இலங்கை அணி டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவில்லை. இலங்கையில் இறுதியாக 2010 ஆம் ஆண்டு இந்திய அணி டெஸ்ட் தொடரில் விளையாடியது. அது முத்தையா முரளிதரனின் கடைசி டெஸ்ட் தொடராகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

# யூரோ கிண்ணத்துடன் ஸ்பெயின் பயிற்றுநர் விலகல்?

அடுத்த வருடம் நடைபெறவுள்ள யூரோ கிண்ண கால்பந்து போட்டியுடன் ஓய்வு பெறப்போவதாக ஸ்பெயின் கால்பந்து அணி பயிற்சியாளர் வின்சென்ட் டெல் போஸ்கி தெரிவித்துள்ளார்.

ஸ்பெயின் கால்பந்து அணியின் பயிற்சியாளர் 63 வயதான வின்சென்ட் டெல் போஸ்கி. பிரேசிலில் நடைபெற்ற உலக கிண்ணக் கால்பந்துத் தொடர் முதல் ஸ்பெயின் அணிக்கு பயிற்சியாளராக இருந்து வருகின்றார். இத்தொடரில் ஸ்பெயின் அணி முதல் சுற்றுடன் வெளியேறியதால் வின்சென்ட் டெல் போஸ்கி கடும் விமர்சனத்திற்குள்ளானார். இந்த நிலையில் அவர் அளித்த ஒரு பேட்டியில் வாழ்க்கையில் எதுவும் உறுதி என்று சொல்ல முடியாது. 2016ஆம் ஆண்டு யூரோ கோப்பை போட்டி வரை பயிற்சியாளர் பணியைத் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். அதன் பின் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகுவேன். கடந்த உலகக் கிண்ணத் தொடர் மிகுந்த வேதனை அளிக்குமொன்றாக அமைந்துவிட்டது. இது குறித்து நான் அதிகம் கதைக்க விரும்பவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

# கிண்ணம் வென்றது இலுப்பைக்கடவை புனித அந்தோனியார்


(இரணைமாதா)

இரணைமாதாநகர் ஆலய திருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மன்னார் இலுப்பைக்கடவை புனித அந்தோனியார் அணி கைப்பற்றிக் கொண்டது.

இரணைமாதாநகர் ஆலய திருவிழாவை முன்னிட்டு இரணைமாதா நகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், பூநகரி கால்பந்தாட்ட லீக்குடன் இணைந்து கிளிநொச்சி, பூநகரி, மன்னார் ஆகிய பகுதிகளில் இயங்கும் அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்துச் சுற்றுப் போட்டியை நடாத்தியது. இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் கடந்த வெள்ளிக் கழமை இரணைமாதா நகர் றோமன் கத்தோலிக்க வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் இலுப்பைக்கடவை புனித அந்தோனியார் அணியும் வலைப்பாடு ஜெகமீட்பர் அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முற்பாதி ஆட்டத்தில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளாலும் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

பிற்பாதி ஆட்டத்தில் எழுச்சி பெற்ற இலுப்பைக்கடவை புனித அந்தோனியார் அணி அடுத்தடுத்து இரு கோல்களை போட்டுக்கொண்டதுடன் முன்னிலையும் பெற்றது. இதற்குப் பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் இறுதி வரை போராடிய ஜெகமீட்பர் அணியால் கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நிறைவில் இலுப்பைக்கடவை புனித அந்தோனியார் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.



இதேவேளை, இப்போட்டித் தொடரின் மூன்றாமிடத்தை மன்னார் தாழ்வுப்பாடு புனித அந்தோனியார் அணி பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு. சந்திரகுமார் வெற்றியீட்டிய அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களை வழங்கினார். மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் மனோகரன் மற்றும் கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் அன்ரன் அன்பழகன் ஆகியோரும் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களை வழங்கினர். இந்நிகழ்வில் மதகுருக்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பார்வையாளர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர.

இதேவேளை, இப்போட்டி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார், நாம் மீள்குடியேற்றத்தின் பின் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றோம். அதனடிபடையில் இவ் வருடம் 132 இலட்சம் ரூபாய்களை விளையாட்டுக்கழகங்களின் வளர்ச்சிக்கு ஒதுக்கியுள்ளோம்.

கிளிநொச்சி மாவட்டத்திலே மீள்குடியேற்றத்தின்பின் விளையாட்டுத்துறைக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றோம். அதற்கூடாக இம் மாவட்டத்தில் அனைத்து விளையாட்டுத் துறைகளும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதனடிப்படையில் இவ்வருடமும் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டுக்காக அதிகளவான நிதியை ஒதுக்கீடு செய்திருக்கின்றோம். இன்னும் சில வாரங்களில் அந்த நிதி விளையாட்டுக் கழகங்களின் செயற்பாடுகளுக்கு கிடைக்கப்பெறும்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் 59 விளையாட்டுக்கழ்கங்கள் தெரிவு செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடுகள் செய்யப் பட்டுள்ளன. அத்தோடு நான்கு பிரதேச செயலகங்களில் இயங்கும் துறைசார்ந்த விளையாட்டு அணிகளுக்குமாக 132 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆகவே முன்னெப்பொழுதும் கிளிநொச்சி மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்காக ஒதுக்கப்படாத பெருந்தொகையான நிதி ஒதுக்கீடாக இது அமைந்துள்ளது.

ஆகவே இந்த நிதி எதிர்காலத்தில் விளையாட்டுக்கழகங் களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இதேவேளை அந்தக்கழகங்களில் இரணைமாதா விளையாட்டுக்கழகமும் உள்வாங்கப்பட்டு ஒன்றரை இலட்சம் ரூபா நிதியும் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதுமட்டு மன்றி அரசாங்கம் இவ் விளையாட்டுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. பாடசாலை மட்டங்களிலும் பல்கலைக்கழக அனுமதியை வழங்குவதிலும் கூட விளையாட்டுத்துறை சார்ந்த திறமைகள் உள்ளடக்கப் படவுள்ளன. எனவே இளம் தலைமுறையினர் யுத்தத்திற்கு பின்பு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி எமது பிரதேசங்களிலும் விளையாட்டில் உலக சாதனையாளர்களை உருவாக்க முடியும் என்ற இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.





அமரர் விபுலானந்தன் நினைவுக்கூடைப்பந்து

# முதல் சுற்றில் வென்ற அணிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் நடாத்தப்பட்டு வரும் அமரர் பொன் விபுலானந்தன் நினைவு கூடைப்பந்ததாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றது. வடமாகாண பாடசாலை அணிகள் பல பங்குகொண்டு வரும் இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஆறு போட்டிகள் நடைபெற்றன.

முதல் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 42-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 76-41 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 35-20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மோதின. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 36-21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 53-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் மல் லாவி மத்திய கல்லூரி அணியும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணியும் மோதின. இதில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 39-22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் யாழ். இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ள அதேவேளை, பெண்கள் பிரிவில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாட-சாலை அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(93)

# இரு பிரிவுகளில் வென்ற யாழ். மத்தி

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கெதிரான நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இரு பிரிவுகளில் வெற்றிபெற்றது. இப்போட்டி கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 14, 16, 18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றன.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய யாழ். மத்திய கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற 16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக இரு அணிகளும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது.

தொடர்ந்து நடைபெற்ற 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தியதுடன் இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியும் பெற்றது. (93)

விளையாட்டு செய்திகள்

# மத்தியஸ்தர் பரீட்சை

(நெல்லியடி)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் விரைவில் கால்பந்து மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையை நடாத்தவுள்ளது. இப்பரீட்சையில் தோற்றவுள்ளோரை இன்று மாலை 5.00 மணிக்கு முன்னர் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கில் தமது பெயர் விபரங்களைப்பதிவு செய்யுமாறு பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் செயலாளர் அறிவித்துள்ளார். (12)


# அஞ்சல் ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடாத்தவுள்ள அஞ்சல் ஓட்ட கானிவேல் விழா விரைவில் நடைபெறவுள்ளது. இப்போட்டி 14, 16,18, 20 ஆகிய வயதுப் பிரிவு. வீர,வீராங்கனைகளுக்கிடையில் நடாத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்க செயலாளர் சுகிர்தனிடம் தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)

# ரணிலின் புலம்பெயர் தமிழரை நோக்கிய பயணம்

– சாலையூரான் –



ஏககாலத்தில் இரு முக்கிய செய்திகள் வெளியாகி இருக்கின்றன. ஒன்று புலம்பெயர் தமிழரை நோக்கிய ரணிலின் பயணச் செய்தி.

மற்றையது, பிரிவினையை தமிழ் கூட்டமைப்பினர் கைவிட்டால் ஜனாதிபதி முறைமையை ஒழிக்கத் தானும் தயார் என மஹிந்த கிளிநொச்சி நிகழ்வில் ஆற்றியிருக்கும் உரை.

ஜனாதிபதி கூறியிருப்பது பற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருக்கும் சுரேஸ் பிரேமச்சந்திரன் நிறைவேற்று அதிகாரத்துக்கும் ஈழக்கோரிக்கைக்கும் என்ன சம்பந்தம் என அப்பாவித்தனமாக கேள்வி எழுப்பி இருக்கிறார்.

நாம் பிரிவினையை கைவிட்டுள்ளோம். ஐக்கிய இலங்கைக்குள்தான் தீர்வை எதிர்பார்க்கிறோம் என்றால் அதை நோக்கி எவ்வாறு செல்கிறோம் என்பதை தமிழ் கூட்டமைப்பினர் நடைமுறையில் வெளிப்படுத்துவது அவசியம்.

நாட்டின் அரசியல் நகர்வில் முக்கியமான ஒரு மைல் கல்லாக அமையப்போகும் ஜனாதிபதி தேர்தலில் இந்த ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைக்காணும் தமது விருப்பத்தை தென்னிலங்கை தரப்புகளுக்கு வெளிப்படுத்தி... அதனை தமிழ் மக்களுக்கு சாதகமான அரசியலாக எவ்வாறு முன்நிறுத்தப் போகிறோம் என்பது தமிழ் கூட்டமைப்பினரை பொறுத்தவரை முக்கியமான ஒரு விடயமாகும்.

ஏனெனில் நிறைவேற்று அதிகாரம் தமிழ் மக்களை விட சிங்கள மக்களையே பெரிதும் பாதித்திருப்பதை தென்னிலங்கையின் அரசியல் தரப்புகள் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ள சூழலில்...

தனது தேர்தல் வெற்றிக்காக புலம்பெயர் தமிழரை நோக்கி ரணில் பயணத்தை மேற்கொண்டிருக்கும் செய்தி, தென்னிலங்கை தரப்பிலும் கூடவே தமிழ் சூழலிலும் எத்தகைய ஒரு மனப்பதிவை மக்களுக்கு ஏற்படுத்தும் என்பது இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்று.

பிரிவினை விடயத்தில் உள்நாட்டில் செயற்பாட்டில் இருக்கும் தமிழ் அரசியல் சக்திகளை விட நாட்டுக்கு வெளியே இருக்கும் புலம்பெயர் அமைப்புகள் தீர்க்கமான பங்காற்றியிருக்கின்றன என்பது தென்னிலங்கை தரப்புக்களால் நன்கறியப்பட்ட விடயம்.

அதுமட்டுமன்றி பிரிவினைக்கான செயற்பாடுகளை முன்நிறுத்தி தமிழ் சூழலின் வாக்கு வங்கியை தீர்மானிப்பதிலும் இந்த அமைப்புக்கள் காத்திரமான பங்கை வகித்து வருவதும் வெளிப்படையான செய்தி.

இந்த நிலையில் ரணிலின் புலம்பெயர் தமிழரை நோக்கிய பயணம் அரசுத்தரப்பு மத்தியில் - சிங்கள மக்கள் மத்தியில் எவ்வாறு உணரப்படும் அது இந்த ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு வெளிப்படும் என்பதை ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தீர்வைக் காணப்போவதாக கூறிக்கொண்டிருக்கும் தமிழ் கூட்டமைப்பினர் தெளிவு படுத்த வேண்டும்.

எதிர்த்தரப்புக்கான ஜனாதிபதி வேட்பாளராக ரணிலை முன்நிறுத்தும் போக்கு முனைப்பு பெற்றிருக்கும் நிலையில், 13 இற்கு அப்பாலான தீர்விற்கு ஐ.தே.க. ஒருபோதும் செல்லாது என்று ரணில் கூறியிருப்பது முக்கியமான ஒரு செய்தி.

அதேபோல, பிரிவினையை தவிர்ப்பதற்காகவே நிறைவேற்று அதிகாரத்தை தம்வசம் வைத்துக்கொள்ள விரும்புவதாக ஜனாதிபதி கூறியிருப்பதும் முக்கியமானதே.

இந்த நிலைமையில் தமிழ் கூட்டமைப்பின் தெரிவு என்னவென்பதையும் அவர்களது திட்டம் என்னவென்பதையும் அவர்கள் வெளிப்படுத்த வேண்டியது கட்டாயம்.

மறுபக்கத்தில் புலம்பெயர் அமைப்புக்களை ரணில் தேடிப்போகும் போது அவை எவ்வாறான நிபந்தனைகளை முன்வைக்கும் என்பது அனைவரும் புரிந்து கொள்ளக் கூடியதே.

இன்னும் ஒருபடி மேலே கூடுதலான சந்தேகக் கண்கொண்டு அதனை நோக்கவேண்டிய நிலையில்தான் தென்னிலங்கை மக்கள் இருப்பார்கள் என்பது கூட்டமைப்பினருக்கு புரியாத ஒரு விடயமல்ல.

இது தமது தேசம் பற்றிய பாதுகாப்பின்மை உணர்வை சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தி, தமிழ் பிரிவினைவாதத் தரப்பிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கான ஒரு தலைவரை நோக்கிய தேடலுக்கே வழிசமைப்பதாக இருக்கும்.

இதில் யார் அடையாளப்படுத்தப்படுகிறார் என்பது முக்கியமல்ல; இனம் சார்ந்து சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கம் பெறும் உணர்வு எத்தகையது என்பதுதான் முக்கியமான பிரச்சினையாகும்.

ஏனெனில் இனம்சார்ந்து மக்களை தேசங்களாக அடையாளப்படுத்துவதன் மூலம் வாக்குகளை ஒருமுகப்படுத்தும் சூழலிலேயே சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கையின் தேர்தல்கள் அமைந்திருக்கின்றன.

சமகாலத்தில் இதற்கு புறம்பாக எந்த ஒரு தேர்தலையும் நாம் எதிர்பார்க்க முடியாத நிலைமை இருதரப்பாலும் தொடரப்படுவதே நமது சோகமாகும்.

# கே.வி. மகாதேவன்



14

– பி.ஜி.எஸ்.மணியன் –

“முதலாளி” படம் அடைந்த மாபெரும் வெற்றி சின்ன பட்ஜெட்டில் படம் எடுக்கும் தயாரிப்பாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது.

இப்படி சின்ன பட்ஜெட்டில் படம் எடுப்பதில் கைதேர்ந்த மலையாள திரை உலகையும் முதலாளியின் மாபெரும் வெற்றி ஈர்த்தது.

பிரேம்நசீர், ஷீலா ஆகிய இருவரும் நடிக்க தயாரான மலையாள “முதலாளி” படத்துக்கு கே.வி. மகாதேவனின் உதவியாளர் டி.கே. புகழேந்தி இசை அமைத்தார்.

1957 - தீபாவளிக்கு வெளிவந்த “முதலாளி” - படத்தை அடுத்து தைப்பொங்கலுக்கு வந்த இன்னொரு வெற்றி மகுடம் கே.வி. மகாதேவனின் சிரத்தை அலங்கரித்தது.

படம் : தை பிறந்தால் வழி பிறக்கும்.

எஸ்.எஸ். ராஜேந்திரன், பிரேம்நசீர், ராஜசுலோச்சனா, எம்.என். ராஜம் முக்கிய வேடங்களில் நடித்தனர்.

அண்ணன் - தங்கை பாசத்தை மையமாகக் கொண்ட இந்தப் படத்தின் பாடல்கள் அனைத்துமே பெருவெற்றி பெற்றன.

படமே “தைபொறந்தா வழி பொறக்கும் தங்கமே தங்கம். தங்கச் சம்பா நெல்விளையும் தங்கமே தங்கம்” என்ற பாடலுடன்தான் துவங்குகிறது.

பி. லீலா - டி.எம். சௌந்தரராஜன் குழுவினருடன் பாடுவது. “மாண்ட்” ராகத்தை இவ்வளவு அழகாக எளிமைப் படுத்தி ஒரு உற்சாகமிக்க பாடலை தரமுடியுமா?

தந்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

பாடலின் முகப்பிசையே (Prelude) கேட்பவரை தாளம்போட வைக்கிறது.

“ஆசையே அலைபோலே நாமெல்லாம் அதன் மேலே” - திருச்சி லோகநாதனின் பாடல் வெளிப்படுத்தும் கருத்துக்களும் உணர்வுகளும்.. விவரிக்க வார்த்தைகள் போதாது. பீம்ப்ளாஸ் ராகத்தில் அலை போல மிதந்து வந்து கேட்பவரைத் தாலாட்டுகிறது இந்தப் பாடல்.

“மண்ணுக்கு மரம் பாரமா. மரத்துக்கு இலை பாரமா. கொடிக்கு காய் பாரமா. பெற்றெடுத்த குழந்தை தாய்க்கு பாரமா” - எம்.எஸ். ராஜேஸ்வரியின் பாடல்.

என்றாலும்... தைபிறந்தால் வழிபிறக்கும்” படப் பாடல்களிலேயே முதலிடம் பெறும் முத்தான பாடல் என்றால்...

அது...

உவமைக் கவிஞர் சுரதா எழுதிய “அமுதும் தேனும் எதற்கு நீ அருகினில் இருக்கையிலே எனக்கு..” பாடல்தான்.

அழியா வரம் பெற்ற இந்தப் பாடலைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்....

பொதுவாக ஒரு பாடலுக்கு மெட்டமைக்க உங்களுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்ற கேள்விக்கு மகாதேவன் தரும் பதிலைப் பார்ப்போம்.

“பாடலாசிரியர் தரும் பாட்டில் உள்ள சந்தமும் தாளமும் ஏற்கெனவே பிரபலமான பாடலின் சாயலில் இருந்தால் அதை நினைவு படுத்தாத வகையில் மெட்டமைக்க வேண்டும். இந்த மாதிரி பாடல்கள் போடும்போது கொஞ்சம் நேரம் பிடிக்கும்.

ஆனால்.. பொதுவாக என்னைப் பொறுத்தவரையில் சிலசமயம் உடனே




மெட்டு பிறந்துவிடும்.” - என்று சொல்லிவிட்டு அதற்கு உதாரணமாக சில பாடல்களை பட்டியலிடுகிறார் கே.வி. மகாதேவன்.

அந்த வரிசையில் விளைந்த பாடல் தான் இந்த “அமுதும் தேனும் எதற்கு”.

பாடல் வரிகளைப் பார்த்தவுடனேயே வந்து விழுந்த மெட்டு.

அதே போல இன்ன ராகத்தில் தான் அமைக்க வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு மகாதேவன் பாடலை அமைப்பதில்லை.

பாடல் வரிகளும், படத்தில் அது இடம்பெறும் கட்டத்துக்கான சூழ்நிலையும் கச்சிதமாக வெளிப்படும் வண்ணம் பல்லவிக்கான டியூன் முதலில் செட் ஆனபிறகு தான் அதற்கான ராகத்தை பற்றியே சிந்திப்பார்.

“அமுதும் தேனும் எதற்கு” பாடலுக்கான ராகமும் அவரை அறியாமலே கச்சிதமாக வந்து விழுந்திருக்கிறது.

மோகன ராகத்தில் அமைக்க வேண்டும் என்று ஆரம்பித்து மோகன கல்யாணியாக மாறிவிட்டது என்று டி.கே. புகழேந்தி ஒரு நேர்காணலில் சொல்லி இருக்கிறார்.

ஆனால் - மோகன கல்யாணியின் மத்யமம் இந்தப் பாடலில் மிஸ்ஸிங். ஆகவே இது மோகனத்திலும் அமையவில்லை. மோகன கல்யாணியிலும் அமையவில்லை. ஆனால் சுத்தமான கர்நாடக ராகத்தில் அமைந்த பாடலாக இருக்கிறது. அது என்ன ராகம்?

கண்டுபிடிக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்த பொழுது இசையில் விற்பன்னரான நண்பர் ஒருவரது உதவியால் தான் இந்தப் பாடல் சங்கராபரண ராகத்தின் ஜன்ய ராகமான “நிரஞ்சனி”- என்ற அபூர்வ ராகத்தில் அமைந்திருக்கிறது என்பது தெரிந்தது.

மிகவும் அபூர்வமான இந்த ராகம் வெகு அற்புதமாக இந்தப் பாடலில் கையாளப் பட்டிருக்கிறது. அபூர்வ ராகங்களை கையாள்வதில் கே.வி. மகாதேவனுக்கு இருக்கும் திறமையை வியப்பதா?

அல்லது “நான் இருக்கிறேன். என்னை உபயோகப் படுத்திக்கொள்ளேன்.” என்று தானாகவே “நிரஞ்சனி” ராக தேவதை அவர் போட்ட மெட்டில் வந்து அமர்ந்து கொண்டுவிட்டாள் என்று எடுத்துக்கொள்வதா?

சீர்காழியின் சாரீரம் தான் எவ்வளவு அழகாக இந்தப் பாடல் வரிகளுக்கேற்றபடி ஜாலம் புரிகிறது. கொஞ்சுகிறது!. அன்பு பொங்க மனம் கவர்ந்த நாயகியை வருணிக்கிறது!

சுரதா, சீர்காழி கோவிந்தராஜன், கே.வி. மகாதேவன் ஆகிய மூவரின் கூட்டணியில் அமைந்த இந்த மாபெரும் வெற்றிப்பாடலுக்கு பயன்படுத்தப் பட்ட இசைக்கருவிகளோ மூன்றே மூன்று. சிதார், வயலின், தபேலா - ஆகிய மூன்றே மூன்று இசைக் கருவிகளை வைத்துக்கொண்டு நிரஞ்சனி ராகத்தில் மகாதேவன் போட்ட மெட்டு காலங்களைக் கடந்து இன்றளவும் நிரந்தரமாக காற்றலைகளில் நிலைத்து விட்டிருக்கிறதே!

திரை இசையில் இந்த “நிரஞ்சனி” ராகத்தை கே.வி. மகாதேவனைத் தவிர வேறு யாருமே பயன் படுத்தி இருக்கமுடியாது என்றுதான் தோன்றுகிறது.

(தொடரும்)

# பொறுப்புணர்வற்ற சினிமா!

– கிருட்சி –



சினிமாவில் இரண்டு வகை. ஒன்று வெகுஜன சினிமா, மற்றது Art Film எனப்படும் கலைச்சினிமா. வெகுஜன சினிமா சனங்களின் பலவீனத்தை அறிந்து அதற்கேற்ப காட்சியமைப் புகளை அமைத்து இலாபத்தை ஈட்டுவதை நோக்காகக் கொண்டது. இதன்மூலம் சமூகத்திற்கு வெறும் பொழுதுபோக்கிற்கு அப்பால் எவ்வித பிரயோ சனமும் ஏற்படாத அதே வேளை, படத்தை தயாரித்தவரும் நடித்தவரும் தியேட்டர் உரிமையாளர்களும் தமது கல்லாப் பெட்டியை நிறைத்துக் கொள்வார்கள்.

கலைச்சினிமா என்பது சமூகத்திற்கு நல்ல கருத்துக்களை சொல்லக்கூடியதாயினும், மக்கள் மத்தியில் அதிகம் சென்றடைய மாட்டாது. திரையரங்குகளிலும் இவ்வாறான படங்களை திரையிட விரும்பமாட்டார்கள்; திரையிட்டாலும் சனங்கள் போகமாட்டார்கள்.

இந்தக் கட்டுரையில் சொல்ல வருவது சனங்களின் பலவீனத்தை அறிந்து இலாப நோக்கை மட்டுமே கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் தென்னிந்திய வெகுஜன சினிமாவைப் பற்றித்தான்.

முன்னர் எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோரை முன்னிறுத்தி வந்த படங்கள் தான் பின்னர் ரஜனி-கமல், விஜய்-அஜித், சூரியா-விக்ரம், தனுஷ்-சிம்பு என தொடர்ந்து வருகின்றது. இவர்கள் தான் படத்தின் ஆணிவேர் இவர்களை விட்டால் இன்று படமே ஓடாத அளவிற்கு நிலைமை வந்துவிட்டது.

இவர்களின் படம் வெளிவரும் போது அதற்கு பலாபிஷேகம் வேறு. தமிழ்நாட்டில் ஊற்றெடுத்த இந்த வியாதி இன்று யாழ்ப் பாணத்திற்கும் பரவிவிட்டது. அத்துடன் தற்போது வெளிவருகின்ற படங்களில் கலாசாரத்தை எவ்வளவு சீரழிக்க முடியுமோ, அவ்வளவிற்கு சீரழித்து இளைஞர்களின் வாழ்வை சிதைப்பது தான் வேதனையளிக்கும் விடயமாக உள்ளது. சிகரெட் பிடிப்பது அதிகளவில் தண்ணியடிப்பது குழுமோதலெனில் வாளால் வெட்டுவது. இதுதான் சினிமாவா? சினிமாவில் எப்பொழுது அலரிவிதை உட்கொண்டால் உயிரிழப்பு ஏற்படும் என்று காட்டினார்களோ அது இங்கே யாழ்ப்பாணத்திலும் பற்றிக்கொண்டது. எப்பொழுது வாள்வீச்சை காட்டினார்களோ அதுவும் எமது இளைஞர்கள் மத்தியில் பிரபலமானது. எப்பொழுது கதாநாயகனும் அவனது குழுவும் சிகரெட், சாராயம் குடிப்பது போல காட்டினார்களோ அதையும் எமது இளைஞர்கள் தவறாமல் பின்பற்றினர். ஒரு பொழுதுபோக்கு வெகுஜன ஊடகமான சினிமா இவற்றுக்கெல்லாமா முன்னோடி?

முன்னொரு தடவை இந்திய குடியரசுத் தலைவராக இருந்த வெங்கட்ராமன் கூறியிருந்தார். சினிமாவை குடும்பத்துடன் பார்க்க முடியவில்லை. தயவு செய்து இந்த பாலியல் வன்முறைக் காட்சிகளை நிறுத்துங்கள் என்று.

அப்படியொரு வெங்கட்ராமன் இன்றைய சினிமாவின் சமூக விரோதப் போக்கு குறித்து விமர்சிக்க இல்லையா?

அண்மையில் வெளிவந்த படங்களில் ஒன்று "கழுகு". இதில் கதாநாயகனின் வேலை மலைப்பாதைகளில் இருந்து விழுந்து தற்கொலை செய்பவர்களின் சடலங்களை கீழிறக்கி அவரும் அவரது குழுவினரும் தூக்கி வருவது. அவர்கள் மலையிலிருந்து இறங்க முன்னரும் இறங்கிய பின்னரும் அதிகமாக சாராயம் குடிப்பதுடன் சிகரெட்டும் பிடிப்பவர்கள். இந்தப் படத்தை நான் எனது 8 வயது மகனுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் என்னைக் கேட்டான் அப்பா என்ன குடிக்கிறார்கள் என்று. நான் அந்த பிஞ்சுள்ளத்திற்கு எதைச் சொல் வேன்? அதேபோன்று கார்த்திக்கின் மகன் கௌதம் நடித்த "என்னமோ ஏதோ" என்ற படத் தில் கதாநாயகி குடிப்பாராம், கதாநயகனும் குடிப்பாராம்... எப்படியிருக்கிறது வாழ்க்கை.

அண்மையில் வெளிவந்த தனுஷின் "வேலையில்லாப் பட்டதாரி" படம் தொடர்பாக விமர்சனம் செய்த இணையத்தளங்களும் பத்திரிகைகளும் தனுஷ் விட்ட இடத்தைப் பிடித்து விட்டார் என்றும் சோக்கான படம் எனவும் எழுதியிருந்தன. ஆனால் இதே இணை யத்தளங்களும் பத்திரிகைகளும் தனுஷ் வாயில் சிகரெட்டுடன் போஸ்டர் அடித்து சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வழிகளில் கூட ஒட்டப்பட்டிருந்ததனை ஏன் விமர்சிக்க மறந்தன.

அவ்வாறெனில் சிகரெட், சாராயம், கதாநாய கியுடனான அதிகளவான நெருக்கம் இவற்றைத் தான் இவைகளும் ஆதரிக்கின்றனவா? எமது இளைய தலைமுறை இவர்களைப் பார்த்துச் சீரழிந்து போவதைப் பற்றி ஏன் சிந்திக்கத் தவறுகின்றன.

தயாரிப்பாளரும் இயக்குநரும் தனது மகளோ மகனோ இவ்வாறு நடந்து கொண்டால் விட்டு விடுவார்களா? மாஸ் ஹீரோக்களின் செயற்பாடு களை நாம் தலையில் வைத்து கொண்டாடி எமது இளைய தலைமுறை அழிந்து செல்வதை இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தான் கண்முன்னே காணப்போகின்றோம். இதற்கு முடிவு தான் என்ன?

நாம் கால்களை குறுக்காக மடக்கி சம்மணம் போட்டு தரையில் உட்காரும் போது, இயல்பாகவே ஆசன நிலைக்கு வந்துவிடுகிறோம். இதற்கு "சுகாசனா" அல்லது "பாதி பத்மாசனா" என்று பெயர். இந்த முறையில் அமைதியாக சாப்பிட உட்காரும்போதே சமிபாட்டுக்கு தயாராகுமாறு மூளைக்கு தகவல் சென்றுவிடுகிறது. சாப்பிடும் தட்டு தரையிலிருப்பதால் நாம் இயல்பாகவே குனிந்து, நிமிர்ந்து சாப்பிடுகிறோம். இதனால் வயிற்றுத் தசைகள் சுருங்கி விரிந்து அமிலம் சுரந்து நாம் சாப்பிடும் உணவை ஜீரணிக்க வைக்கிறது.

பத்மாசன நிலையில் இருக்கும் போது வயிற்றைச் சுற்றியுள்ள தசைகள் இறுக்கமடைவதால், அந்த இடத்தில் ஏற்படும் வலிகள் குறைகின்றன. மேலும் இந்த ஆசன நிலையில் வயிறு அழுத்தப்படாமல் இருப்பதால் ஜீரணசக்தி அதிகரிக்கிறது.

நாம் தரையில் நேராக அமர்ந்து சாப்பிடும்போது. முதுகெலும்பும், தோள்களும் சீரான நிலையில் இருக்கின்றன. இதனால் தாறுமாறான நிலையில் உட்காருவதால் ஏற்படும் வலிகளும், அசதியும் நீங்கிவிடுகின்றன.




தரையில் அமர்வதால் முழங்கால் மூட்டுகளும், இடுப்பு எலும்புகளும் வலுவடைகின்றன. அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருப்பதால் இவை மிகவும் இலகுத் தன்மை அடைந்து நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது.

தரையில் உட்கார்ந்து எழுந்திருப்பதால் நம் உடலின் வலிமை அதிகரித்து ஆயுளும் கூடுவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## தரையில் அமர்ந்து சாப்பிடுங்கள்

## வியாபார சாதனைகள்!





உலக சாதனைகளை வெளியிடும் கின்னஸ் நிறுவனம், வியாபார சாதனைகள் பற்றி, Guinness Book of Business Records என்ற புத்தகத்தை வெளியிட்டிருக்கிறது. மாதிரிக்கு, அதிலுள்ள சில வியாபார சாதனைகள்:

- உலகில் மிக அதிகமானவர்கள் பணிபுரியும் தொழிற்சாலை: அமெரிக்காவின் ஜெனரல் மோட்டார்ஸ்; ஏழு இலட்சம் பேர் இத்தொழிற்சாலையில் பணியாற்றுகின்றனர்.
- உலகில் மிக அதிகமானவர்களை வேலையில் வைத்திருக்கும் நிறுவனம், 'இந்திய ரயில்வே!'
- உலகில் மிகவும் பழைய நிறுவனம்: மரம், உலோகப் பொருட்களை விற்கும், 'ஸ்டோரா கோப்பார் பெர்க் பெர்க்ஸ்லாக்' என்ற நிறுவனம். ஆயிரம் ஆண்டுகளாக நடந்து வரும் இந்நிறுவனம், ஸ்வீடன் நாட்டில் உள்ளது.
- உலகில் அதிகமான பொருட்கள் கண்டுபிடித்து, காப்புரிமைப் பதிவு செய்து இருப்பவர் தோமஸ் அல்வா எடிசன்! 1069 பொருட்கள் காப்புரிமைப் பதிவு செய்துள்ளார். மின்சாரம், சினிமா புரொஜெக்டர் போன்றவை இதில் அடங்கும்.
- அதிக சொத்துகள் உள்ள நிறுவனம்: ஜப்பானின், 'ப்யூஜி வங்கி!'
- உலகில் முதல் பில்லியனர்: அமெரிக்காவின் ஜோன்.டி.றொக்பெல்லர். 1918இல் 1.25 பில்லியன் டொலர்கள்.
- இதுவரை உலகில் மனித இனத்தால் குடிக்கப்பட்ட கொக்கோ கோலா எவ்வளவு தெரியுமா? உலகின் மிகப் பெரிய நீர்வீழ்ச்சியான நயாகரா நீர்வீழ்ச்சியில், 38 மணி 2 நிமிடங்களில் தொடர்ந்து கொட்டிக் கொண்டிருக்கும் நீரின் அளவு.
- உலகிலேயே இதுவரை நடந்த மிகப் பெரிய பண்ட மாற்றுதல் என்ன தெரியுமா?

கடந்த, 1984 ஜூலை மாதம், றோயல் சவூதி அரேபியன் எயார்லைன்ஸ், 36 மில்லியன் பீப்பாய் பெற்றோல் கொடுத்து, பத்து போயிங் 747 விமானங்களை பெற்றது தான்.

# ஆணவத்தால் வந்த அழிவு!

[சிறுவர் கதை]



ஒரு முறை எறும்புகள் எல்லாம் சேர்ந்து தங்கள் கூட்டத்தை நடாத்தின.

அந்தக் கூட்டத்தில், "நாம் ஒன்றாக வரிசையாகச் சென்று கொண்டிருக்கும் போது ஏதாவது ஒரு யானை வந்து நம்மை மிதித்து விடுகிறது. நம் கூட்டத்திலிருக்கும் எறும்புகளில் குறைந்தது ஆயிரம் எறும்புகளாவது இறந்து போய் விடுகின்றன... இதைத் தடுக்க இந்த யானைக்கு நாம் ஒரு முடிவு கட்ட வேண்டும்" என்று அனைத்து எறும்புகளும் புகார் தெரிவித்தன.

இதைக் கேட்ட எறும்பு களின் தலைவன், "ஆமாம், யானை மிகப்பெரிய உருவம். யானையிடமிருந்து நம்மைப் பாதுகாக்க, நாம் கடவுளிடம்தான் ஒரு நல்ல வரம் வாங்க வேண்டும்" என்றது.

"ஆமாம், நாம் கடவுளி டம் வரம் கேட்பது நல்லதுதான். எறும்பாகிய நாம் கடித்தால் கடிபட்டவர் இறந்து போய் விட வேண்டும் என்று வரம் கேட்க வேண்டும்" என்றன.

எறும்புகளின் தலைவன், "கடவுளிடம் வரம் வாங்குவது ஒன்று எளிமையானதில்லை. நம்மில் யாராவது கடவுளிடம் சென்று நமக்கான வரத்தைக் கேட்டு வர வேண்டும். எனக்கு வயதாகி விட்டது. நம்மில் வேறு யாராவது ஒருவரைத் தேர்வு செய்து கடவுளிடம் அனுப்பி வைக்கலாம்." என்றது.

எறும்புகளும் தலைவனின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு, கடவுளைச் சந்தித்துத் தங்களுக்கான வரத்தைக் கேட்க ஒருவரைத் தேர்வு செய்தன. தேர்வு செய்யப்பட்ட எறும்புக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கடவுளைச் சந்திக்கத் தானே தகுதியா- னவர் என்று ஆணவம் கொண்டது. ஆனால், அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

சில நாட்களுக்குப் பின்பு அந்த எறும்பு கடவுளைச் சென்று சந்தித்தது. எறும்புக் கூட்டத்தின் சார்பில் தங்கள் கோரிக்கையை முன்வைப்பதாகச் சொன்னது.

கடவுளும் அந்த எறும்பிடம் என்ன கோரிக்கை என்று கேட்டார்.

தான் எனும் அகந்தையுடன் வந்திருந்த அந்த எறும்பு கடவுளிடம், "எறும்பாகிய நான் கடித்தால் இறந்து போய் விட வேண்டும்" என்று கேட்டது.

கடவுளும், "நீ கேட்ட வரத்தை உனக்குத் தந்தேன்" என்றார்.

கடவுளிடம் வரம் வாங்கிய மகிழ்ச்சியில் அந்த எறும்பு, கடவுள் கொடுத்த வரத்தைச் சோதித்துப் பார்க்க விரும்பியது.

கடவுளைக் கடித்தது. கடவுள் தன் கையினால் அந்த எறும்பை அடிக்க அது சாகும் நிலைக்குச் சென்றது.

உடனே அந்த எறும்பு, "கடவுளே, நீங்கள் என்னை ஏமாற்றி விட்டீர்கள், நீங்கள் கொடுத்த வரத்தின்படி கடிபட்டவர் சாகாமல், கடித்த நானே சாகப் போகிறேனே..." என்றது.

கடவுள், "எறும்பே, நீ என்ன வரம் கேட்டாய்? எறும்பாகிய நான் கடித்தால் இறந்து போய் விட வேண்டும் என்று கேட்டாய். நீ கடித்தாய். இப்பொழுது நீ சாகப் போகிறாய்" என்றார்.

ஆணவப்பட்ட அந்த எறும்பு செத்தது.

## (காலச்சுவடு ஒக்ரோபர் மாத இதழின் ஆசிரிய தலையங்கம்)




இரணைமடு இலங்கையின் வடக்கில் உள்ள மிகப் பெரிய நீர்த்தேக்கம். முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பகுதியில் உள்ள இந்த நீர்த்தேக்கத்துக்கு வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து நீர் வருகிறது. ஆனால் இந்தக் குளத்தின் பாசனநீர் மற்றும் பயன்பாட்டு நீர் கிளிநொச்சி மாவட்டத்திற்கே செல்கிறது.

1912 இல் தொடங்கி1922 இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கம் அன்று பிரிட்டிஷ் ஆட்சியில் இலங்கை அரசியலில் செல்வாக்காக இருந்த சேர். பொன். இராமநாதனின் பரிந்துரையில் அவருடைய 1000 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட நெற்பயிர்ச் செய்கைக்காகக் கட்டப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்தைக் கட்டும் பணியில் இந்தியாவில் இருந்து வருவிக்கப்பட்ட தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள். பின்னர் அது படிப்படியாக விரிவாக்கப்பட்டு இப்பொழுதுள்ள ஒரு இலட்சத்து அறு பது ஆயிரம் ஹெக்டர் நீர்ப்பரப்பளவைப் பெற்றுள்ளது. இந்தக் குளத்தில் இருந்தே கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்றில் இரண்டு பகுதியில் நெற்பயிரிடல் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நீர்த்தேக்கத்தின் தென்பகுதியில் உள்ள அம்பகாமம் என்ற காட்டுப் பிரதேசத்தில்தான் விடுதலைப் புலிகளின் முதலாவது பயிற்சி முகாம் 1975 காலப்பகுதியில் இருந்துள்ளது. வன்னியில் மேற்கொள்ளப்பட்ட இலங்கை இராணுவத்தின் பெருஞ்சமரான ஜெயசிக்குறு நடவடிக்கையில் இந்தக் குளம் மட்டுமே படையினரால் கைப்பற்றப்படாமல் இருந்தது.

இந்தக் குளத்தின் வடக்குப் பகுதியில் உள்ள அணைக்கட்டின் வழியாகவே கிழக்கு வன்னிக்கும் மேற்கு வன்னிக்குமான பயணங்களும் தொடர்பும் நடந்தன. இந்த நீர்த்தேக்கத்தில்தான் 2002 இல் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் அவருடைய துணைவி அடேல் பாலசிங்கமும் விமானத்தில் வந்து இறங்கினர். பாலசிங்கம் தம்பதிகளை விடுதலைப்புலிகளின் தலைவரும் அவருடைய மனைவி மதிவதனியும் புலிகளின் தளபதிகளும் பொறுப்பாளர்களும் வரவேற்றனர்.

இந்த நீர்த்தேக்கத்தின் மேற்கே கிளிநொச்சி நகர் உள்ளது. கிழக்கே விடுதலைப்புலிகளின் விமான நிலையம் உள்ளது. இப்பொழுது இந்த விமான நிலையத்தைப் படையினர் தமது கட்டுப்பாட்டில் எடுத்துப் புதிதாக நிர்மாணித்திருக்கிறார்கள்.

போர் முடிந்த பிறகு இந்த நீர்த்தேக்கத்திற்கு இலங்கையின் அதிபர் மகிந்த ராஜபக்ஷ விஜயம் செய்திருந்தார். நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் உள்ள படைத்துறைத் தலைமையகத்தில் இலங்கையின் மந்திரிசபைக் கூட்டத்தை நடாத்தினார். இலங்கையின் வரலாற்றில் வடக்கில் நடாத்தப்பட்ட முதலாவது மந்திரிசபைக் கூட்டம் இதுவாகும்.

நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதியில் இப்பொழுது இலங்கை இராணுவத்தின் கிளிநொச்சி மாவட்டத்திற்கான படைத்துறைச் செயலகம் உள்ளது. இதை அண்மித்த பகுதியில்தான் செஞ்சோலை சிறுவர் இல்லம் உள்ளது. முன்னர் பிரபாகரனின் நேரடிக் கண்காணிப்பில் ஜெனனி என்ற மூத்த பெண் போராளியின் பொறுப்பில் இருந்த இந்த இல்லத்தை இப்பொழுது நிர்வகித்து வருபவர் விடுதலைப்புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளரான கே.பி என்ற குமரன் பத்மநாதன்.

இரணைமடுவுக்கு மேற்கே உள்ளது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடமும் பொறியியற் பீடமும். இந்தப் பல்கலைக்கழகம் விடுதலைப்புலிகளால் நிர்மாணிக்கப்பட்டது. போரினால் பாதிக்கப்பட்டிருந்த கட்டடங்களை மீளப் புனரமைத்து புதிதாக மேலும் கட்டடங்களை உருவாக்கி வருகிறார்கள். இங்குள்ள கலாசார மையத்தை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசு நிதி உதவி அளித்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிர்மாணத்துக்கும் புனரமைப்புக்கும்கூட இந்திய அரசு உதவியிருக்கிறது. இரணைமடுவை ஆதாரமாகக் கொண்டே கிளிநொச்சியின் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டது.

இரணைமடு நீர்த்தேக்கத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்துக்கான குடிநீர் விநியோகத்தைச் செய்வதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கிறது. இந்த எதிர்ப்பை கிளிநொச்சியில் உள்ள இரணைமடு நீர்த்தேக்கத்தின் கீழ் பயிர் செய்யும் விவசாயிகள் முன்னெடுத்து வருகிறார்கள். இதற்கான பின்னணியில் உள்ளூர் அரசியல்வாதிகள் சிலர் இயங்குகிறார்கள்.

குறிப்பாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல்வாதிகளில் சிலர் எதிர்ப்பு அலையை உருவாக்கி வருகிறார்கள். இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராஜா போன்றவர்கள் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி குடிநீர்த் திட்டத்துக்கு ஆதரவளிக்கிறார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் மேற்கு, வடமராட்சி, தீவகம், தென்மராட்சி, யாழ்ப்பாண நகர் போன்ற இடங்களில் நீர்ப்பிரச்சினை உண்டு. இங்கே நல்ல தண்ணீரைப் பெறுவதற்காகத் தலைமுறை தலைமுறையாக மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

இதற்குத் தீர்வுகாணும் நோக்கில் இரணைமடு நீர்த்தேக்கத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான குடிநீரை மட்டும் பெறும் திட்டம் உருவாக்கப்பட்டது. திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிக்கடன் திட்டத்தின்கீழ் இரண்டாயிரத்து முன்னூறு கோடி இலங்கை ரூபாய்கள் ஒதுக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த விவசாயிகளின் ஒப்புதலும் வேண்டும். ஆனால் விவசாயிகள் இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் விதமாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் காலப்பகுதி முடிவடைகிறது என்று ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவித்துத் திட்டத்திலிருந்து பின்வாங்கப் போவதாக எச்சரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் நோக்கம் - இப்போதுள்ள நீர்த்தேக்கத்தை மேலும் விரிவுபடுத்தி, அணைக்கட்டை மேலும் உயர்த்தி அதிகளவு நீரைத் தேக்குவதாகும். அப்படித் தேக்கப்படும் கூடுதலான நீரில் இருந்து 12 சதவீதம் நீரை மட்டுமே யாழ்ப்பாணத்தின் குடிநீர்த் தேவைக்காகப் பயன்படுத்துவதாகும்.

விவசாயிகளின் எதிர்ப்புக்குக் காரணம் - விவசாயத்துக்கான பாசனத்துக்கு நீர் போதாமையாகிவிடும் என்ற அச்சம்.

நீர் மேலாண்மை அடிப்படையில் குடிநீரும் விவசாயத்துக்கான பாசன நீரும் உரியமுறையில் பகிரப்பட வேண்டும்.- இதுவே தேசிய நீர்ப் பங்கீட்டுக் கொள்கையாகும். அத்துடன் நீர்த்தேக்கத்தைப் புனரமைத்து விரிவாக்கம் செய்து, அதிகளவு நீரைத் தேக்கிய பின்னரே குடிநீர் பெறப்படும். இதில் விவசாயிகளின் நலன் 100 சதவீதம் பாதுகாக்கப்படும். ஆனால் இதை ஊடகங்களும் அரசியல்வாதிகளும் தத்தம் நலன்சார்ந்து பெரும் விவகாரமாக்கி விட்டனர்.

தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் திட்டத்தை மாற்று ஏற்பாடாக நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இரணைமடு நீர்த்தேக்கத்தைத் தனியாகப் புனரமைப்பது என்றும் யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடல்நீரை நன்னீராக மாற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இதைப்பற்றிச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், யாழ்ப்பாணத்துக்கான குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடல்நீரை நன்னீராக மாற்றுவது பற்றியே பேசப்பட்டதாகவும் இரணைமடு நீர்த்தேக்கத்தைப் புனரமைப்பதைப் பற்றிப் பேசப்பட்டபோது ஆசிய அபிவிருத்தி வங்கி அதற்கு இணங்கவில்லை என்றும் தெரிவிக்கின்றனர். கடந்த முப்பது ஆண்டுகளாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இந்த நீர்த்தேக்கம் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாசன நீர், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்ப் பிரச்சினைகள் நீங்க இத்திட்டம் நிறைவேறுவது அவசியம். இத்திட்டம் விவசாயிகளின் ஒப்புதலுடன் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுவது வடமாகாண அரசின் கையில் உள்ளது. மக்களின் வாழ்வாதாரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வடமாகாண தமிழ் மக்கள் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும். மாகாண அரசு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடில் இலங்கை அரசு இரணைமடுவை கையகப்படுத்தி தேசிய நீர் மேலாண்மை கொள்கையின் அடிப்படையில் தீர்வுகாணும் சாத்தியம் உள்ளது. மாகாண அரசுகள் மேலும் பலவீனமடைந்து அதிகாரம் மைய அரசிடம் குவியவே இது வழிவகுக்கும்.

**கிளிநொச்சி மாவட்டத்தின் பாசன நீர், கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணத்திற்கான குடிநீர்ப் பிரச்சினைகள் நீங்க இத்திட்டம் நிறைவேறுவது அவசியம். இத்திட்டம் விவசாயிகளின் ஒப்புதலுடன் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்படுவது வடமாகாண அரசின் கையில் உள்ளது. மக்களின் வாழ்வாதாரமான இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண வடமாகாண தமிழ் மக்கள் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும். மாகாண அரசு இப்பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடில் இலங்கை அரசு இரணைமடுவை கையகப்படுத்தி தேசிய நீர் மேலாண்மை கொள்கையின் அடிப்படையில் தீர்வுகாணும் சாத்தியம் உள்ளது. மாகாண அரசுகள் மேலும் பலவீனமடைந்து அதிகாரம் மைய அரசிடம் குவியவே இது வழிவகுக்கும்.**

– தமது வேஷங்கள் அம்பலமாகும் என்பதனால் –

# விசேட அபிவிருத்தி மீளாய்வு கூட்டத்தை புறக்கணித்துள்ளது கூட்டமைப்பு

## அமைச்சர் டக்ளஸ் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற விசேட அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பங்கேற்றிருந்தால் அவர்களது பொட்டுக்கோடுகள் அம்பலமாகிவிடும் என்பதற்காகவே அக்கூட்டத்தில் அவர்கள் பங்கேற்கவில்லையென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மன்னாரில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளுடான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சில காலங்களுக்கு முன்னர் இங்கு அமைதியற்ற, சுதந்திரமற்ற சூழலே இருந்து வந்தது. எந்த நேரத்திலும் என்னவும் நடக்கலாம் என்கின்ற அச்சநிலையும் நிலவியது.

ஆனால், தற்போது அந்த நிலை முற்றாக மாற்றியமைக்கப்பட்டு ஒரு அமைதிச் சூழல் நிலவுகின்றது. இருந்த போதிலும் இவ்வாறான அமைதியான சூழலில் அரசு பல்வேறுபட்ட அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றது.

ஆனால், இதை விரும்பாத சுயலாப அரசியல்வாதிகள் பொய்த்தனமான பிரசாரங்களை முன்னெடுத்து மக்களை குழப்பி வருகின்றனர்.

இந்நிலையில், அண்மையில் எனது அழைப்பை ஏற்று வடபகுதிக்கு வருகை தந்த ஜனாதிபதி தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் மாவட்டங்களின் விசேட அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், வடமாகாண முதலமைச்சருக்கும் அழைப்பு விடுத்திருந்த போதிலும் அவர்கள் அதனைப் புறக்கணித்திருந்தனர்.

அவ்வாறு அக் கூட்டத்தை புறக்கணித்ததன் காரணங்கள் வடக்கில் அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மூடிமறைத்து வருகின்றனர் என்பதுடன் ஏனைய மாகாணங்களை விடவும் வடக்கு மாகாணத்திற்கு அதிகளவு நிதி அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அதில் மிகக் குறைந்தளவிலான நிதியினையே வடக்கு மாகாணசபை செலவு செய்துள்ளது.

மேலும் கூட்டமைப்பினர் வடபகுதியின் அபிவிருத்திக்கு அரசும், வடமாகாண ஆளுநரும் தடையாக இருக்கின்றனர் என பல்வேறுபட்ட உண்மைக்குப் புறம்பான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், அவர்களது பொய்ப் பிரசாரங்கள் தொடர்பில் இந்த அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துரையாடப்படும் போது எல்லாவிதமான பொட்டுக் கோடுகளும் அம்பலமாகிவிடும் என்ற காரணத்தினாலேயே அவர்கள் இந்தக் கூட்டத்தைப் புறக்கணித்தனர் என்று சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட்டத்தை புறக்கணித்திருந்த போதிலும் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுகளில் பெருமளவான மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

இதனிடையே மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளது தேவைகள், பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் துறை சார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வலுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் லிங்கேஸ், ஈ.பி.டி.பியின் மன்னார் மாவட்ட உதவி அமைப்பாளர் சந்துரு பனை அபிவிருத்தி சபையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பீரிஸ் ஆகியோர் உடனிருந்தனர்.

## வடதாரகை மாயம் மக்கள் ஏமாற்றம்

நெடுந்தீவு மக்களுக்கென போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் பொருட்டு கடந்த வாரம் காங்கேசன்துறையிலிருந்து குறிகட்டுவானுக்கு கொண்டுவரப்பட்டிருந்த வடதாரகை மோட்டார் படகு மீண்டும் காங்கேசன்துறைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது.


நெடுந்தீவு மக்களின் போக்குவரத்துக்கென திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் வந்த வடதாரகை மக்களுக்கு சேவை செய்யாமலேயே திரும்பிச் சென்றுள்ளது.

இதனால் நெடுந்தீவு மக்கள் அதிருப்தி அடைந்துள்ளதுடன் மீண்டும் வடதாரகையின் வருகைக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்பு தமிழ் சங்கம் நடாத்தும் வாசிப்பு மாத வினாவிடைப் போட்டி

வாசிப்பு மாதத்தையொட்டி கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான எழுத்து மூல வினாவிடைப் போட்டி எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு மேற்பிரிவு, திறந்த போட்டி என நான்கு பிரிவுகளாக இடம்பெறும். கீழ்ப்பிரிவு தரம் 6 முதல் 8வரை, மத்திய பிரிவு தரம் 9 முதல் 11, வரை, மேற்பிரிவு தரம் 12 முதல் 13 வரை நடைபெறும் கீழ்ப்பிரிவு போட்டியானது அழவள்ளியப்பா தங்கத்தாத்தா, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதி வேந்தனார் பஞ்சதந்திரக் கதைகள் இவற்றை அடியொற்றியதாக இருக்கும் மத்திய பிரிவு போட்டி இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்திலிங்கம் ஆகியோரின் சிறுகதைகள், பாரதிபாடல் நளவெண்பா, மற்றும் ஈழத்து எழுத்தாளர் பற்றிய பொதுவான அறிக்கை என்பனவற்றை உள்ளடக்கி அமையும் மேற்பிரிவு போட்டி மகாகவி, முருகையன், நீலவாணன், சில்லையூர் செல்வராஜன் பாரதி, பாடல்கள், உயர்தர வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகம், ஈழத்து எழுத்தாளர்கள் பற்றிய பொதுவான அறிக்கைகள் என்பனவற்றையும் திறந்த போட்டி பழந்தமிழ் நவீன இலக்கியங்களையும் அடக்கியிருக்கும். (10)



J/87 கிராமிய சிவில் பாதுகாப்பு குழுவின் விசேட கூட்டம் தலைவர் எம்.லாபீர் தலைமையில் நடைபெற்ற போது சிவில் பொலிஸ் பொறுப்பதிகாரி எம். வீரவர்த்தன உரையாற்றுவதைக் காண லாம். (105)




## முகாமைத்துவ உதவியாளர்கள் (இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை)

இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை நாடளாவிய ரீதியில் 253 நிலையங்களைக் கொண்ட நாட்டின் பிரமாண்டமான தொழில் பயிற்சித் திட்டத்தினைக் கொண்ட இச்சபையானது, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள வெற்றிடங்களைக் கொண்ட முகாமைத்துவ உதவியாளர்கள் பதவிகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் போன்ற பிரதேசங்களில் வெற்றிடங்கள் உள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தவிசாளர், இலங்கை தொழில்பயிற்சி அதிகார சபை, நிபனதா பியஸ், 4 ஆம் மாடி, எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவு (20.10.2014) இன்றாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

விண்ணப்பத்தின் இடது பக்க மேல் மூலையில் 'முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமற்ற) பதவிக்காக சேர்த்துக் கொள்ளல்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனம் (நாரா நிறுவனம்)

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நாரா நிறுவனத்தின் பின்வரும் வரும் பதவி நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உதவிப் பணிப்பாளர், கணக்கியல் உத்தியோகத்தர், விஞ்ஞானி, உதவி செயற்றிட்ட கண்காணிப்பு உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (இயந்திரவியல்), மொழி பெயர்ப்பாளர், தலைமை செலுத்துநர் (கப்பல்), சிறாப்பர் ஆகிய பதவி நிலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் மேற்படி பதவிகளுக்கான கல்வித்தகைமைகள் மற்றும் மேலதிக விபரங்களையும் கடந்த 09.10.2014 ஆம் திகதி வெளியாகிய தினகரன் பத்திரிகையில் பார்வையிட்டுக் கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பணிப்பாளர் நாயகம், தேசிய நீரியல்வள ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனம், காக்கைத்தீவு, மட்டக்குளி, கொழும்பு 15 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## இலங்கை கணக்காளர் சேவை வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

இலங்கை கணக்காளர் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

எனவே அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் மற்றும் மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப்பெயர், முகவரிகளுடன் ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையின் 011-2785230, 0112177075 என்ற தொலைபேசி இலக்கத்துடனும், 0112784232 என்ற பக்ஸ் இலக்கத்துடனும் தொடர்புகொள்ள முடியுமென பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் தரம் III போட்டிப் பரீட்சை - 2012 (2013)


பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குரிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் வெற்றிடங்களாகவுள்ள விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013) எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மாவட்டம் உட்பட நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சையில் பொது உளச்சார்பு, பொது அறிவு மற்றும் விவசாயம் சம்பந்தமான பொதுவான அறிவு போன்ற விடயங்களை உள்ளடங்கிய வினாத்தாள் அமையுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொகுப்பு:- சி.என்.எச். சாலிஸ்

# பொன்னான வாய்ப்புக்களை பலதடவை இழந்துவிட்டோம்

## எமது நிலமைக்கு இதுவேகாரணம்



(யாழ்ப்பாணம்)

சந்தர்ப்பம் என்பது சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளல்ல. அது தானாக எம்மை நோக்கி வரும்போது பெற்றுக்கொள்ள வேண்டிய அதிஷ்டம் போன்றது. கடந்த காலத்தில் எமது இனம் சுயநல வாதிகளது நலனுக்காக பல தடவைகள் கிடைத்த அரிய சந்தர்ப்பங்களை எல்லாம் தவற விட்டுள்ளது. இதனால்தான் மிகப் பெரும் அழிவுகளை சந்தித்து அடுத்த சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கவேண்டிய நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

மூளாய் றெமிங்ரன் கல்விச்சோலையின் 41 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு தலைவர் ப.சுதர்சன் தலைமையில் றெமிங்ரன் கலையரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இறைவன் படைத்த மனிதனை புதுமைகள் நிறைந்த சிந்தனையாளர்களாக்கி உலகை உன்னத நிலைக்கு கொண்டு செல்லும் கருவிகளாக்கும் வல்லமை கொண்ட பெருமை ஆசிரியர்களுக்குத்தான் உண்டு. அந்த உன்னத சேவையை கொடுக்கும் களமாக கடந்த 41 வருடங்களாக றெமிங்ரன் கல்விச்சோலை இருந்ததுவருகின்றது. இது பல சவால்களை கடந்து இயக்கி வரும் எனது நண்பர் மனோகரன் ஆசிரியரது சேவை என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதுதான் எனது ஆசை. நானும் இந்தக் கல்வி நிலையத்தின் ஒரு பழைய மாணவன். இன்றைய நிகழ்வானது கடந்து சென்ற பள்ளிப்பருவ காலத்தை எனக்கு மீண்டும் நினைவூட்டுகின்றது.

கல்வியை பூரணமாக பெற்றுக் கொள்ள முடியுமா என்ற அச்சம் நிறைந்த காலம் மறைந்து தென்பகுதி மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் அனைத்து வசதிகளையும் நாங்களும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலை உங்களுக்கு கிடைத்துள்ளது.

ஒரே தடவையில் அனைத்தும் கிடைக்கவேண்டும் என்ற வறட்டுத்தனமான கொள்கைகளை கைவிட்டு, கிடைக்கும் வளங்களை பெற்றுக்கொள்ளும் மனநிலை உங்களிடம் வளருமானால் நிச்சயமாக எமது மாணவர்களின் கல்வி நிலை உச்சநிலையை அடைவதுடன் தட்டிக்களிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் எமது உரிமைகளும் எம்மை வந்து சேரும் என்றார்.

இந்த நிகழ்வில் வைத்திய கலாநிதி ஆ.கிருஸ்ணமூர்த்தி, வலி.மேற்கு எதிர்க்கட்சி தலைவர் ஜீவன், ஆசுகவி சிவசுப்பிரமணியம் ஆகியோருடன் கல்விப்புலம் சார்ந்த பலரும் கல்வி நிலைய மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர்.

# பரதநாட்டிய போதனாசிரியர் பதவி விண்ணப்பிக்க இப்போது வாய்ப்பு

(யாழ்நிருபர்)

பரதநாட்டியம், சங்கீதம் ஆகிய துறைகளில் போதனாசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கால்நடைவள மற்றும் கிராமியசமூக அபிவிருத்தி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இறம்பொடை தொண்டமான் கலாசாரநிலைய அழகியற்கல்லூரிக்கு பரதநாட்டியம் மற்றும் கர்நாட்க சங்கீதம் ஆகிய துறைகளில் போதனாசிரியர்கள் பதவிக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் குறிப்பிட்டதுறையில் முதுமாணி பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும். இளமாணி பட்டம் எனில் முதலாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இப்பதவியில் அல்லது இதற்குச்சமனான பதவியில் இரண்டு வருட அனுபவம் இருக்க வேண்டும். 25 , 45 வயதுக்குட்பட்ட தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு ஒருவார காலத்தினுள் அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

The project managar, Thondaman cultural centre romboda
Thondaman aesthetic college,
Thawalenthenn-Kothmalc (10)

# நினைவுப்பேருரை

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஒரேற்றர் சி.சுப்பிரமணியம் ஞாபகார்த்த உரை கல்லூரி அதிபர் இ.சஸ்வரதாஸன் தலைமையில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் கந்தையா உபாத்தியாயர் மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நினைவுப் பேருரையை 'என் வாழ்நாளிலே ஒரேற்றர்' என்னும் தலைப்பில் கொழும்பு பழைய மாணவர் சங்க உபதலைவர் எஸ்.பத்மநாதன் நிகழ்த்தவுள்ளார். (10)

# ஆசிரிய சேவைப்பிரமாண நடைமுறை பாரபட்சம் இருக்கக்கூடாது

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(யாழ்.நிருபர்)

அதிபர் ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஜனாதிபதி முன்வந்தமை மகிழ்ச்சி தருகிறது. இதனை விரைவாக நடைமுறைப்படுத்துவதோடு பாரபட்சம் இல்லாமல் நியாயகுர் வழங்கப்படவேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க அதிபர்கள், ஆசிரியர்களின் பதவி உயர்வு, சம்பள அதிகரிப்பு மற்றும் இடமாற்றங்கள், நியமனங்கள், தரமானசேவைப் பிரமாணக்குறிப்பு தொடர்பாக தொடர்ந்தும் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்து வந்த நிலையில் ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

கடந்த 5 ஆம் திகதி பண்டாரவளையில் சர்வதேச கல்வியகத்தின் அனுசரணையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடாத்திய ஆசிரிய தினவிழாவில் ஆயிரக்கணக்கான அதிபர்களும் ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்து பிரகடனம் ஒன்றை வெளியிட்டனர்.

அதில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அதிபர்கள் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வு ஏனைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வில்லை எனில் ஏனைய தொழிற சங்கங்களை இணைத்து தொடா போராட்டங்களை நடாத்துவோம் என ஏகோபித்த குரல்எழுப்பி பிரகடனம் செய்தனர்.

அதன் பின்னர் ஜனாதிபதி ஜனவரிக்கு முன்னர் அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள் தீர்த்து வைககப்படுமென அறிவித்திருப்பது மகிழ்ச்சிதரும் விடயமாகும்.

அதேவேளை ஆசிரிய சேவைகென புதிய பிரமாணக்குறிப்பு ஒன்றை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அதில் அதிபர்கள், ஆசிரியர்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும் குறைபாடுகள் இருப்பதாகவும் அறியப்பட்ட நிலையில் அண்மையில் கல்வியமைச்சில் நடைபெற்ற ஆசிரியர்களின் பிரமாணக்குறிப்பு தொடர்பான கூட்டத்தில் இல்ங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கம் தனது முன்மொழிவுகளை முன்வைத்தது அதில் அதிபர், ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு, ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த ஆசிரியர்களின் பதவி உயர்வு என்பன பற்றி வலுவாக முன்வைக்கப்பட்ட நிலையில் அவற்றை உடனடியாக அமுல்படுத்த வேண்டுமென்றும் அவற்றின் தாமதத்தால் பல்வேறு பதவி உயர்வுகள், புதிய நியமனங்கள் என்பவற்றால் அதிபர், ஆசிரியர்கள பெரிதும் பாதிக்கப்படுவரெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.(10)

# கந்தப்பளையில் மாணவர்கள் மோதல்; ஒருவர் மரணம் மேலும் ஒருவர் காயம்

இராகலை, கோணப்பிட்டிய கந்தப்பளை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்விகற்கும் இரு மாணவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த மாணவன், எட்டு நாட்களுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

கோணப்பிட்டிய தோட்டத்தைச் சேர்ந்த தம்பிராசா கோகுலன் எனும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்,

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த பாடசாலையில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களுக்கிடையில், கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை இடைவேளை நேரத்தில் 11.15 மணியளவில் மோதல் ஏற்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து படுகாயமடைந்த இரண்டு மாணவர்களும் இராகலை, கோணப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து, மேலதிக சிகிச்சைகளுக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

அனுமதிக்கப்பட்ட இரண்டு மாணவர்களில் ஒரு மாணவரின் நிலைமை கவலைக்கிடமாக காணப்பட்டதையடுத்து, அவர் கண்டி வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு 12.50 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் நுவரெலியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 9 வயதான மாணவன், சிகிச்சைகளை முடித்துகொண்டு வீட்டுக்கு திரும்பியுள்ளதாக இராகலை பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை இராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நட்சத்திர ஆமை விற்பனை முயற்சி அதிகாரிகளால் தடுத்து நிறுத்தம்

ஐந்து நட்சத்திர ஆமை, மற்றும் இரண்டு இராட்சத அணில்களை சட்டவிரோதமாக விற்பனை செய்யும் நோக்கில் வீட்டில் வைத்திருந்தவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கோனாவலாவின் பட்டிவிலா பிரதேசத்தில் வனவிலங்குப்பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஒரு வீட்டில் ஐந்து நட்சத்திர ஆமை, கூண்டில் அடைக்கப்பட்ட நிலையில் இரண்டு இராட்சத அணில்களை மீட்டதோடு இந்த விலங்குகளை வீட்டில் வைத்திருந்த 45 வயதுடையவரையும் கைது செய்தனர். கைதான நபர் மஹர நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டார். இதன்போது குறித்த சந்தேக நபர் அவற்றைத் தாம் வீட்டில் வளர்த்து வந்ததாக நீதிமன்றில் வாதிட்டார்.

ஆனால் அதிகாரிகளோ விலங்குகள் அடைக்கப்பட்டிருந்தூ கூண்டுகள் வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட கூண்டுகள் போன்று இல்லை என்றும் அவை தற்காலிகமாக விலங்குகளை கூண்டில் அடைத்து வைத்திருப்பதற்கான கூண்டுகள் போன்றே உள்ளன என்றும் மன்றில் தெரிவித்தனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான், விலங்குகள் விற்பனை நோக்கத்துக்காகவே பிடித்து வைத்திருக்கப்பட்டிருக்கின்றன எனத் தெரிவித்து இரண்டு இராட்சத அணில்களை வைத்திருந்தமைக்காக 35 ஆயிரம் ரூபாவும், ஐந்து நட்சத்திர ஆமை வைத்திருந்தமைக்காக 25 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்தார். அத்துடன் குறித்த விலங்குகளை தெஹிவளை மிருகக் காட்சி சாலையில் சேர்க்குமாறும் உத்தரவிட்டார்.

# தேயிலைக்கு நியாயவிலை அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

தேயிலைக்கு நியாயமான சந்தை விலையைப் பெற்றுந்தந்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும்படி அரசிடம் கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது.

தேயிலைக்கு உரிய விலை வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட 5 கோரிக்கைகளை அரசாங்கம் வரவு - செலவு திட்டத்தில் நிறைவேற்ற வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளன தேசிய அமைப்பாளர் லால் பிரேமலால் விடுத்துள்ளார்.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தரம் 3 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

1 மணி



**01) தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✗ ) எனவும் கூட்டினுள் இடுக.**

(1) மின்னஞ்சல் மூலம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
(2) நூல்களில் இருந்து தகவல்களைப் பெற முடியாது.
(3) இலங்கையில் பல்வேறு தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன.
(4) இலங்கையில் பல தினசரி சஞ்சிகைகள் வெளிவருகின்றன.
(5) இலங்கையில் நவீன தொலைபேசி வசதிகள் காணப்படுகின்றன.

**02) பொருத்தமான சொற்களை இணைக்குக.**

| | |
|---|---|
| வீரகேசரி | சஞ்சிகை |
| குமுதம் | முத்திரை |
| புதுவருடம் | தினசரிப் பத்திரிகை |
| கடிதம் | ஒலிப்பதிவு செய்தல் |
| ஒலிப்பதிவுக் கருவி | வாழ்த்து மடல் |

**03) வினாக்களுக்கு விடை தருக.**

(1) இலங்கையில் காணப்படும் தகவல் தொடர்பு சாதனங்கள் நான்கு தருக.
........................................
(2) இலங்கையில் விற்பனையாகும் சஞ்சிகைகள் நான்கின் பெயர்களைத் தருக.
........................................
(3) இலங்கையில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் மூன்றின் பெயர்களைத் தருக.
........................................
(4) வாழ்த்து மடல்கள் அனுப்பப்படும் நான்கு சந்தர்ப்பங்கள் தருக.
........................................
(5) பத்திரிகைகளில் வெளிவரும் வி· டயங்கள் சில கூறுக.
........................................

**04) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.**

| வெளிநாடுகளுடனும் | புத்தகங்கள் | தபாற்கந்தோருக்குச் | தகவல்களைப் | கடிதம் |
|---|---|---|---|---|

(1) நூலகத்தில்.................... வாசிக்க முடியும்.
(2) கையடக்கத் தொலைபேசிகளால் .................... தொடர்புகொள்ள முடியும்.
(3) தந்தி அடிப்பதற்கு.................... செல்லல் வேண்டும்.
(4) மின்னஞ்சல் மூலம் .................... ஒன்றை அனுப்பலாம்.
(5) இணையம் மூலம் பல.................... பெறலாம்.

**14) பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை**

| கடைப் | மிதக்கின்றது | புதிய | மேடைகளில் | கப்பல்கள் |
|---|---|---|---|---|


(1) மண்ணெண்ணெயை நீரில் இட்டதும் அது ....................
(2) போக்குவரத்து விதிமுறைகளைச் சரியாகக் .................... பிடிக்கா விட்டால் விபத்துக்கள் ஏற்படும்.
(3) மிளகாய், தக்காளி, கத்தரி போன்ற தாவரங்களின் வித்துக்கள் .................... பதியம் போடப்படுகின்றன.
(4) வித்துக்கள், கிளைகள், இலைகள் மூலம் .................... தாவரங்களைப் பெறலாம்.
(5) வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு .................... மூலம் பொருட்கள் கொண்டுவரப்படுகின்றன.

**15) படத்தை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**



(1) மேலேயுள்ள படம் கூறுவது என்ன? ....................
(2) படத்தில் கத்தரி, பாகல், மிளகாய் தாவரங்களைக் குறித்துக் காட்டுக.
(3) படத்தில் கீரைவகைத் தாவரம் ஒன்று உள்ளது. அதன் பெயரைத் தருக.
........................................
(4) வீட்டுத் தோட்டத்தினால் கிடைக்கும் பயன்கள் இரண்டு தருக.
........................................
(5) படரும் தாவர வகையைச் சேர்ந்த மூன்று தாவரங்கள் தருக.

**16)**



**Write 5 words in this picture**

1) ........................................
2) ........................................
3) ........................................
4) ........................................
5) ........................................

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்

**05) பாடசாலையில் அண்மையில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களை எழுதுக.**

**(1) இல்ல விளையாட்டுப் போட்டி**

★ போட்டி நடைபெற்ற திகதி ..........................................................................
★ போட்டியிட்ட இல்லங்கள் ..........................................................................
★ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டவர் ......................................................
★ இப்போட்டியில் நீர் பங்குபற்றிய விளையாட்டு ...............................................
★ இப்போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டிய இல்லம் ...........................................................

**06) (2) கலை விழா**

★ நடைபெற்ற திகதி ..........................................................................
★ பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டவர் ......................................................
★ எவ்வாறான நிகழ்ச்சிகள் நடைபெற்றன ..........................................................
★ நீர் எவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குபற்றினீர் ...................................................
★ உமது நண்பர்கள் எவ்வாறான நிகழ்ச்சிகளில் பங்குபற்றினார்கள் .................................................................................
★ நடைபெற்ற நிகழ்ச்சிகளில் எந்நிகழ்ச்சி சிறந்த நிகழ்ச்சியெனக் கருதுகிறீர்கள் .................................................................................

**07) (3) பாடசாலையில் புதிய கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டு விழா**

★ நடைபெற்ற திகதி ..........................................................................
★ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டவர் ......................................................
★ அடிக்கல்லை நாட்டி வைத்தவர் ..........................................................
★ இக்கட்டடத் தொகுதியால் கிடைக்கும் நன்மைகள் ...............................................

**08) அக்காலத்தில் உமது பாடசாலை காணப்பட்ட நிலை பற்றிய தகவல்களும் இன்றைய நிலை பற்றிய தகவல்களும்.**

**(1) பாடசாலையின் கடந்தகால தகவல்களை மூத்தோர்களிடம் இருந்தும் பெரியோர்களிடம் இருந்தும் பெறுதல்**

★ ஆரம்பகால கட்டடத்தின் அமைப்பு ..........................................................
★ பாடசாலையின் சுற்றாடல் தன்மை ..........................................................
★ ஆரம்பத்தில் இருந்த மரம், செடி, கொடிகள் ..................................................
★ பாடசாலைக் கட்டடத்தின் நிழல் படங்கள் ....................................................
★ அதிபர்களின் பெயர்கள் ..........................................................................
★ ஆசிரியர்களின் எண்ணிக்கை ..........................................................
★ மாணவர்களின் எண்ணிக்கை ..........................................................




**09) (2) பாடசாலையின் அன்றைய நிலையையும் இன்றைய நிலையையும் ஒப்பிடுதல்**


| | அன்று | இன்று |
|---|---|---|
| கட்டடங்களும் வேறு வளங்களும் | | |
| விளையாட்டு மைதானம் | | |
| அதிபர்கள் | | |
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | | |
| மாணவர்களின் எண்ணிக்கை | | |
| விஞ்ஞான ஆய்வுகூட வசதி | | |
| கணனி வசதி | | |




**10) பொருத்தமான சொல்லை இணைக்குக.**

| | | | |
|---|---|---|---|
| (1) | துணியை வெட்டுதல் | 1 | பாதையைக் கடத்தல் |
| (2) | மஞ்சள் கோடு | 2 | நீரைச் சுத்திகரிக்கும் |
| (3) | குளோரின் | 3 | மலேரியாக் காய்ச்சல் |
| (4) | நுளம்பு | 4 | தானியங்கள் |
| (5) | நெல், கோதுமை | 5 | கத்தரிக்கோல் |

**11) பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.**

(1)  ..........................
(2)  ..........................
(3)  ..........................
(4)  ..........................

(5) 

(6) 
(7) 
(8) 

## 12) Arrange and write

1) a/ farmer / in / the / field / is ..........................................................
2) Teacher / water / is / the/ drinking ..........................................................
3) My / driver / is / a / uncle ..........................................................
4) Doctor / work / hospital / in / the ..........................................................
5) God / I / Pray / all / for ..........................................................

## 13) Read and Draw

1) Three Birds ..........................................................
2) Five leaves ..........................................................
3) Six Chairs ..........................................................
4) Cup and Saucer ..........................................................
5) Bucket ..........................................................

# வடக்கு மக்களின் தேவையறிந்து சேவையாற்றுபவர் அமைச்சர் டக்ளஸ்

## வடமாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தான் எடுத்துக் கொண்ட கொள்கை நிலையில் தளராது நின்று மக்களின் தொண்டனாக தொடர்ச்சியாக உழைத்துக் கொண்டிருப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மட்டுமே என ஆறுதல் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளருமான சுந்தரம் டிவகலால தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன கலைக்கல்லூரி மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற முன்பள்ளி டிப்ளோமா பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டமளிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு தலைமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடலிகள் வானுயருமா? என்ற மகுடத்தில் ஆறுதல் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 410 முன்பள்ளி ஆசிரியர்கள் டிப்ளோமா பட்டதாரிகளாக கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா உரையாற்றுகையில்,

ஆறுதல் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடையும் அதே வேளை, வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். முன்பள்ளி கற்கைநெறி பயிற்சி என்பது சிறப்பான விடயம் என்பது மட்டுமன்றி இதனூடாக ஆசிரியர்களது தரத்தை உயர்த்தவும் மேம்படுத்தவும் முடியும்.

அந்தவகையில் சிறார்களுக்கு சரியான வழியை காட்ட வேண்டிய ஆசிரியர்களது கௌரவம் பாதுகாக்கப்படுவதுடன் அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். இந்நாட்டில் எந்த மாகாணத்திலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அந்தந்த மாகாணசபையூடாக எவ்விதமான உதவிகளும் கிடைக்கப் பெறாத நிலையில் எனது முயற்சியின் பயனாக வடமாகாணத்தில் மட்டும் ஆளுநர் ஊடாக மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கிடைத்து வருகின்றது என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர் விமல் வீரதிசநாயக்க, வடமாகாண முன்னாள் கல்விப்பணிப்பாளர் விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் நற்குணலிங்கம், முன்பள்ளிக்கல்வி இணைப்பாளர் தம்பையா உள்ளிட்ட கல்விப்பணிப்பாளர், கல்வியியலாளர்கள், கல்விப்புலம்சார்ந்தோர் என பல்துறைசார்ந்தோரும் கலந்து கொண்டனர்.



மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் விசுவநாதர் நடராசாவின் மணிவிழா மற்றும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றபோது நூல் வெளியிட்டு வைக்கப்படுவதைக் காணலாம். (48)

# சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றிய முதியோர்கள் கௌரவிக்கப்படவேண்டும்

## நல்லூர் பிரதேச செயலர் தெரிவிப்பு

(யாழ்.நிருபர்)

யுத்த காலங்களில் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் சமுதாய வளர்ச்சிக்காக சிறப்பாகச் சேவையாற்றிய முதியோர்கள் கௌரவிக்கப்படவேண்டும். எமது நாட்டின் அபிவிருத்திக்காக ஓயாது உழைத்து இன்று ஓய்வு நிலையில் இருக்கின்ற முதியவர்கள் எமது பெரிய செல்வம் என்பதை யாரும் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு நல்லூர் பிரதேச சபை நடாத்திய சர்வதேச சிறுவர், முதியோர் மற்றும் மாற்றுவலுவுடையோர் தினவிழாவில் கலந்து கொண்டு தலைமையுரை நிகழ்த்திய நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் குறிப்பிட்டார்.

நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை நடைபெற்ற இந்நிகழ்வில் செந்தில் நந்தனன் தொடர்ந்து பேசுகையில,

சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். சிறுவர்களின் நலன்கள் பேணப்படவேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வு சமூகத்தில் அனைத்து தரப்பினரிடையேயும் ஏற்படுத்தப்பட வேண்டும். எமது பிரதேசத்தில் வாழ்கின்ற எதிர்கால சந்ததியினராகிய சிறுவர்கள் எந்தவிதத்திலும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகக் கூடாது.

கடந்தகால அவர்களது வாழ்க்கைக் காலத்தில் குறிப்பாக யுத்த காலத்தில் இந்த சமூகத்திற்காகச் சிறப்பாகச் சேவையாற்றியவர்கள் முதியவர்கள். அவர்களது நலன்களைப் பேணுவதில் நாம் அதிக அக்கறையுடன் செயற்படவேண்டும்.

வயது வந்த பெற்றோரை பாதுகாப்பதில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. சிலர் பெற்றோரைக் கவனிக்காது விடுதல் அல்லது முதியோர் காப்பகங்களில் சேர்த்து விடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும்.

மாற்றுத் திறனாளிகளும் சமூகத்தில் மற்றவர்களைப் போல வாழவேண்டும். அவர்களை நாம் மதித்துப் போற்ற வேண்டும். அவர்களின் பொருளாதார தேவைகளை நிறைவேற்றும் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (10)

# குடிநீர் விநியோகம் நிறுத்தம் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

(கரவெட்டி)

கரவெட்டி சிறிநாரதர் மேற் குப் பகுதியில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் இப்பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு பிரதேச சபையினால் குடிநீர் பௌசர் மூலம் விநியோகிக்கப்பட்ட நிலையில் தற்போது இம்மக்கள் குடிநீரைப்பெற நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை இராச கிராமத்துக்கான குடிநீர் விநியோகமும் நிறுத்தப்பட்டுள்ளதால் இக் கிராமமக்களும் குடிநீரின்றி தவிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே இரு கிராம மக்களினதும் குடிநீர்த் தேவையை கருத்திற்கொண்டு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை வழமை போன்று குடிநீரை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# பராமரிப்பற்ற இரு சிறுமியர்; விடுதியில் சேர்க்க அனுமதி

நெல்லியடி கரணவாய் மத்தி கிராமத்தில் சரியான அரவணைப்பும் வழிகாட்டல்களும் பராமரிப்பும் இன்றி சிறுமிகள் இருவர் பராமரிப்பு விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் சிறுமிகள் குடிகார தகப்பனின் சரியான அரவணைப்பின்றியும் உணவு இன்றியும் பாடசாலை செல்ல முடியாமல் பல்வேறு கஷ்டங்களை எதிர்கொள்வதாக பொதுமக்களினால் கரவெட்டிப் பிரதேச சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் அவர் நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதனை அடுத்து பொலிஸார் கடந்த 13 ஆம் திகதி இருவரையும் சிறுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அவர்கள் கல்வி நடவடிக்கைக்காக பராமரிப்பு விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு தொடர்ந்து இழுத்தடிப்பு

## பதில் வழங்காவிடின் ஆளுநரின் கவனத்திற்கு

வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரும்போக நெற்செய்கையில் கடந்த வருடம் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வறட்சி காப்புறுதி நிதி தொடர்ந்து இழுத்தடிப்பு செய்து வழங்கப்படாது உள்ளது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் வடமாகாண ஆளுநர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு விரைவில் கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேற்படி விடயமாக முன்னாள் நவாலி விவசாய சம்மேளன செயலாளர் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நெற்செய்கையாளர்கள் கடும் வறட்சி காரணமாக முழு நஷ்டத்தை அனுபவித்தனர்.

இதேநேரம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வறட்சி பாதிப்புக்கான காப்புறுதி நிதியை முழுமையாக செலுத்தி இருந்ததுடன் அதற்கான ஆவணங்களையும் உரிய காலத்தில் செலுத்தி இருந்தனர்.

ஆனால் குறிப்பிட்ட சில பிரதேசங்களுக்கு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களங்களினால் நிதி விடுவிப்பு செய்யப்பட்டிருந்தது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகள் தினமும் தமது வங்கி கணக்கில் நஷ்டஈட்டு நிதி வரவு வைக்கப்பட்டுள்ளதா? இல்லையா என அறிய அலைந்த வண்ணம் உள்ளனர்.

தற்போது 2014 ஆம் ஆண்டுக்கான பெரும்போக நெல் விதைப்பு ஆரம்பமாகியுள்ளது.

கடந்த வருடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்புறுதி நஷ்டஈடு வழங்குவதில் ஏன் மேலதிக கால தாமதம் ஏற்படுகின்றது.

உரிய அதிகாரிகள். இவ் விடயத்தில் ஒருவார காலத்தில் தகுந்த பதில் அளிக்க முன்வர வேண்டும்.

இல்லாவிடில் அடுத்த கட்டம் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறிக்கு விவசாயிகள் இணைந்த வகையில் மகஜர் சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## வாழ்க வளமுடன்

பெயர் :ம.அஸ்வின்

முகவரி: இல.422 பண்டி செட்டிவீதி, ஜெயபுரம் தெற்கு.

அகவை 3 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்

# ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகள்

## ஒபாமா ஆய்வு



ஈராக்கிலும், சிரியாவிலும் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் தாக்கம் குறித்து அமெரிக்க அதிபர் ஒபாமா அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தேசிய பாதுகாப்பு அதிகாரிகளுடன் அதிபர் ஒபாமா நடத்திய சந்திப்பின்போது, ஈராக்கிலும், சிரியாவிலும் தற்போது நிலவும் அரசியல் சூழல்கள் குறித்து கேட்டறிந்தார்.

ஈராக்கிய வீரரகளுக்கு போர்பயிற்சி, ஆலோசனை, ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்கும் திட்டத்தால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்தும் அவர் விவாதித்தார். மேலும், அந்த நாடுகளில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பிற்கு எதிரான நடவடிக்கைகளின் தாக்கம் குறித்தும் அவர் ஆலோசித்தார்.

துணை அதிபர் ஜோ பைடன், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூஸன் ரைஸ் ஆகியோர் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்றனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மகாராஷ்ரா, ஹரியானாவில் பா.ஐ.க. அமோக வெற்றி




(மும்பை)

இந்திய பிரதமராக மோடி பதவியேற்ற பின்னர் 2 ஆவதாக நடக்கும் சட்டசபை தேர்தலில் பா,ஜ.,வுக்கு மகாூராஷ்ரா மற்றும் ஹரியானா ஆகிய இரண்டு மாநிலங்களிலும் கணிசமான வெற்றி கிடைத்து வருகிறது.

மாநில முழு அளவிலான சட்டசபை தேர்தலில் இதுவரை இந்த மாநிலங்களில் கிடைக்காத அளவிற்கு பா.ஜ., வெற்றியை குவித்து வருகிறது. ஹரியானாவிலும், மகாராஷ்ராவிலும் பா.ஜ., ஆட்சி மலரும் வாய்ப்பு உருவாகி இருக்கிறது.

கடந்த 15ஆம் திகதி இங்கு வாக்குப்பதிவு நடந்தது. இந்த வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. ஹரியானாவில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளில் 50இற்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ., முன்னிலையில் இருந்து வருகிறது. 15 ஆண்டு காலமாக இங்கு ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி 14 இடங்களில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது. இந்திய தேசிய லோக்தளம் 18 தொகுதிகளில் முன்னிலை பெற்று வருகிறது. இம்மாநிலத்தில் பா.ஜ., பெரும்பான்மை பெற்று முதன் முதலாக ஆட்சியை பிடிக்கிறது.

# சீனாவில் ரொக்கெட் ஏவுதளம் விரைவில் செயற்படுத்த திட்டம்



சீனாவில் கட்டப்பட்டு வரும் அதிநவீன ரொக்கெட் ஏவுதளம் விரைவில் செயற்பாட்டுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது அந்த நாட்டின் 4ஆவது ஏவுதளம் ஆகும்.

ஹெய்னன் மாகாணத்தில் 'வென்சங் செயற்கைக்கோள். ஏவு மையம்' நிறுவ திட்டமிடப்பட்டு அதன் கட்டுமானப் பணிகள் நடை பெற்று வந்தன. இப்பணிகள் நிறைவடைந்ததையடுத்து இந்த மையம் விரைவில் செயற்பாட்டுக்கு வரும் என சீன அரசின் 'பீப்புள்ஸ் டெய்லி' செய்திவெளியிட்டுள்ளது.

அடுத்த தலைமுறை ரொக்கெட்கள் மற்றும் விண்வெளி ஆய்வு மையத்துக்கு அனுப்பப்படும் வாகனங்களை விண்ணில் செலுத்துவதற்கான அதிநவீன வசதிகளுடன் இந்த மையம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# கடத்தப்பட்ட 219 மாணவிகளையும் விடுவிப்பதாக போகோ ஹரம் அறிவிப்பு




நைஜீரியாவில் கடத்தப்பட்ட பள்ளி மாணவிகளை விடுவிப்பதாக போகோ ஹரம் தீவிரவாதிகள் அறிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தனி நாடு கோரி நைஜீரிய இராணுவத்துடன் போர் புரிந்து வந்த போகோ ஹரம் தீவிரவாதிகள் கடந்த ஏப்ரல் 14ஆம் திகதி தேர்வு எழுத சென்ற 300 பள்ளி மாணவிகளை கடத்தி சென்றுள்ளனர்.

கடத்தப்பட்ட மாணவிகளில் சிலர் தப்பி ஓடி ,வந்துவிட்ட நிலையில், போகோ ஹரம் தீவிரவாதிகளின் பிடியில் 219 மாணவிகள் உள்ளதாக கூறப்படுகிறது. சுமார் 6 மாத காலமாகியும் மாணவிகளைக்கண்டுபிடிக்க 'முடியாமல் அந்நாட்டின் அரசு திணறி வருவது உலக நாடுகளை கொந்தளிக்க செய்துள்ளது.

எனவே மாணவிகளை மீட்பது தொடர்பாக நைஜீரிய ஜனாதிபதி குட்லக் ஜொனாத்தனின் (Goodluck Jonathan) முதன்மை செயலாளர் ஹசன் டுக்கூர் (Hasan Dukur) சமாதான பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் ஒரு கட்டமாக இராணுவத்தினர் மீது நடத்தும் தாக்குதலை கைவிடுவதாக போகோ ஹரம் தீவிரவாதிகள் உறுதியளித்துள்ளதாகவும், கடத்தப்பட்ட மாணவிகள் - விரைவில் விடுவிக்கப்படுவார்கள் எனவும் ஹசன் டுக்கூர் தெரிவித்துள்ளார்.

# கேமரூனில் தாக்குதல் 107 தீவிரவாதிகள் பலி




(யாவோன்டி)

கேமரூன் நாட்டில் இராணுவத்தினர் நடாத்திய அதிரடி தாக்குதலில் 107 போகோஹரம் தீவிரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். நைஜீரியாவில் போகோ ஹரம் தீவிரவாதிகள் பல்வேறு வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் நடாத்தி வரும் வன்முறைத் தாக்குதல்களுக்கு இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில், நேற்று 'முன்தினம் காலை கேமரூன் இராணுவத்தினர் எல்லை பகுதி நகரங்களில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது போகோஹரம் தீவிரவாதிகள் பீரங்கி, பயணிகள் வாகனம் மற்றும் ஒரு கார் மூலம் இராணுவத்தினர் மீது வெடிகுண்டு தாக்குதல் . நடத்தினார்கள். இதைத் தொடர்ந்து, இரு தரப்பினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கி தாக்குதலில் 107 போகோஹரம் தீவிரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். இராணுவத்தரப்பில் 8 வீரர்கள் பலியானார்கள் என்று கேமரூன் இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# பிரிட்டனை வந்தடைந்தது உலகின் மிகப்பெரிய கப்பல்



பிரிட்டனின் லண்டன் துறைமுகத்திற்கு, முதல் முறையாக வந்த, உலகின் மிகப்பெரிய, "ஒயசிஸ் ஆப் த சீஸ்" என்னும் பயணிகள் கப்பலை, நூற்றுக்கணக்கானோர் வரவேற்றனர்.

சுமார், 2,25,282 டொன் எடையில், 1,187 அடி நீளமும், 208 அடி அகலமும் கொண்ட, ராயல் கரீபியன் நிறுவனத்திற்கு சொந்தமான இக்கப்பலில், பயணிகள் தங்குவதற்காக, 16 தளங்களில் அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆறாயிரத்து 296 பயணிகள் மற்றும் 2,000 ஊழியர்கள் தங்கும் வசதி உள்ளது. பின்லாந்தின், துர்க்கூவில் இக கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகள் நடந்த கப்பல் கட்டுமானப் பணிக்கு, சுமார் 7,889 கோடி ரூபாய்செலவிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில், நீச்சல் குளம், பூங்கா, திறந்தவெளி தோட்டம் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும் உள்ளன. 24 மணி நேர உணவு வசதியுடன், தினமும், 2.35 கோடி லீற்றர் தண் ணீர் பயன்படுத்தப்படுகிறது.

பத்தாயிரம் சதுர மீற்றரில் வணிக வளாகம், 37 பார்கள், 20 உணவகங்கள், அலங்காரத்திற்காக, 12 ஆயிரம் பனை மரங்கள் உள்ளன. கப்பல் முழுவதற்குமான மின் இணைப்புக்கு, 3,300 மைல நீளம் உள்ள மின் கேபிள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 2009ஆம் ஆண்டு, தனது போக்குவரத்தைத் தொடங்கிய இந்தக் கப்பல், கடந்த புதன்கிழமை லண்டன் துறைமுகத்தை வந்தடைந்தது.

# இஸ்ரேல் பிரதமரை கடத்த திட்டமிட்டார் சதாம் ஹுசேன்



(ஜெருசலேம்)

ஈராக் முன்னாள் அதிபராகவும் சர்வாதிகாரியாகவும் இருந்தவர் சதாம்ஹுசேன். இவர் அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இவர் அதிபராக இருந்தபோது கடந்த 1981ஆம் ஆண்டில் ஈராக் அணு உலை மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசி அழித்தன.

அதற்கு பழி வாங்க சதாம் ஹுசேன் திட்டமிட்டார். இச்சம்பவத்தின் போது இஸ்ரேல் பிரதமராக மெனாசெம் பிகின் பதவி வகித்தார்.

இவரைக்கடத்தி பக்தாத் கொண்டு வர சதாம்ஹுசேன் திட்டமிட்டார். மேற்கத்திய நாட்டைச் சேர்ந்த ஒரு தலைவர் வற்புறுத்தலை தொடர்ந்து அந்த திட்டம் கைவிடப்பட்டது. இந்த தகவலை சதாம் ஹுசேனின் சட்டத்தரணி பாடீ ஆரிப்தான் எழுதிய புத்தகத்தில் தெரி வித்துள்ளார். அப்புத்தகம் விரைவில் வெளியாகவுள்ளது.

உலகச் செய்திகள்

# பாடசாலைகளை தரம் உயர்த்துவதற்கு பொலிஸ், காணி அதிகாரம் தேவையில்லை

## வடமாகாணசபை உறுப்பினர் தவநாதன் தெரிவிப்பு



கிளிநொச்சியில் பல கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களின் பாடசாலைகளைத் தரம் உயர்த்துமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சரிடம் சென்று கோரிக்கை விடுக்கின்ற போது தங்களிடம் அதிகாரம் இல்லை, மாகாண சபைக்குரிய . அதிகாரங்களை அரசு வழங்கவில்லை, இதனால் எங்களால் எதுவும் செய்ய முடியாது எனத்தெரிவித்து வருகின்றனர். 13 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் படி மாகாண சபை நிரலில் காணி, பொலிஸ் அதிகாரங்களைத் தவிர ஏனைய 35 அதிகாரங்கள் மாகாண சபையிடம் உள்ளது. இதில் மாகாண கல்வி அதிகாரமும் அடங்கியுள்ளது. எனவே. ஒரு பாடசாலையின் தரத்தை உயர்த்துவதற்கு கல்லி அமைச்சருக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவையில்லை கல்வி அதிகாரமே போதுமானது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்

கிளிநொச்சி, செல்வாநகர் பிரதேசத்தில் 27 இலட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

பாடசாலைகளைத் தரமுயர்த்துவதற்குரிய அதிகாரம் கல்வி அமைச்சரிடம் உள்ளது. ஆனால், அதனைக்கூட அவர்கள் செயற்படுத்தவில்லை. இதற்கு காரணம் பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கின்ற மக்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாக இருந்தால் தான் அவர்களிடம் இருந்து வாக்குகளைப் பெற முடியும். கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் கல்வியறிவைப் பெற்று நல்ல நிலைக்கு வந்தால் அவர் கள் உண்மைகளை அறிந்து வாக்குகளைப் போடமாட்டார்கள் என்ற அச்சம் இவர்களிடத்தில் காணப்படுகின்றது. ஆனால், நாம் கிராமங்களில் இருந்தே அபிவிருத்திப் பணிகளை ஆரம்பிக்கின்றோம். கிராமப்புற மாணவர்களின கல்வி வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக நாம் மூன்று பாடசாலைகளை புதிதாக ஆரம்பித்திருக்கின்றோம். நாம் குறித்த பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது பல சவால்களை எதிர்கொண்டோம். ஆனால், இன்று அந்தப் பாடசாலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகளுடன் போட்டிபோடும் அளவிற்கு வளர்ந்துள்ளன என்றார்.

செல்வாநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் மகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதி தலைவருமான முருகேசு சந்திரகுமார் கரைச்சி பிரதேச செயலாளர் கோ.நாகேஸ்வரன், கரைச்சி பிரதேச சபையின் எதிர்கட்சி தலைவர் மனோகரன், உறுப்பினர் கிருஸ்ணசாமி, செல்வாநகர் பாடசாலை அதிபர் கேதீஸ்வரன், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் றெஜினோலட், சமூாத்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தரூபன், கமக்கார அமைப்பின் தலைவர் மகேந்திரன், முன்பள்ளி ஆசிரியர்கள் பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# துணுக்காய்-கொக்காவில்-யாழ்ப்பாணம் புதிய பேருந்து சேவை தேவை

துணுக்காயில் இருந்து கொக்காவில் ஊடாக கிளிநொச்சிக்கு புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பிக்கும்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழித்தடத்தில் புதிய சேவையை ஆரம்பித்தால் ஐயங்கன் குளம், புத்துவெட்டுவான், பழைய முருகண்டி போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தினசரி நன்மை பெறுவர்.

இப்போது இவர்கள் தமது தேவைகளை நிறைவு செய்வதற்காக கிளிநொச்சிக்கு அல்லது மல்லாவிக்குச் செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் கோரிக்கை விடுத்த போதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லையென்று பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரான த.சிவகுமார் தெரிவித்தார். (140)

# முதியோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட மாணவருக்கான போட்டி முடிவுகள்

(யாழ்.நிருபர்)

சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றல் உடையோர் தின விழாவை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலகத்தினால் நல்லூர் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**தரம் - 6, 7, 8 - கட்டுரை**

ப.கேமன் (யா/கனகரத்தினம் ம.ம.வி), மோ.சுசந்திகா (யா/இந்து மகளிர் கல்லூரி), உ. வினிஸ்ரிகா (யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி).

**தரம் - 6, 7, 8 - கவிதை**

செ.வானதி (யா/இந்து மகளிர் கல்லூரி), செ.அருட்ஷனா (யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), ச.சாளினி (ய/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்).

**தரம் - 6, 7, 8 - பேச்சு**

ஜெ.சிந்துஜா (யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), சி.தாரணி (யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் வித்தியாலயம்), க.கஜானனன் (யா/கனகரத்தினம் ம.ம.வி).

**தரம் - 9, 10, 11 - கட்டுரை**

சு.பிரதீப் (யா/கனகரத்தினம் ம.ம.வி), ஜெ.கௌசல்யா (யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), ச.பிரித்திகா (யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்).

**தரம் - 9, 10, 11 - கவிதை**

ஸ்ரீ.தக்ஷாயனி (யா/மங்கையர்க்கரசி வித்தியாலயம்), அ. கஸ்தூரி (யா/இந்து மகளிர் கல்லூரி), ந.அறிவழகன் (யா/கனகரத்தினம் ம.ம.வி).

**தரம் - 9, 10, 11 - பேச்சு**

சு.தக்ஷாயினி (யா/இந்து மகளிர் கல்லூரி), வ.திலக்சனா (யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் வித்தியாலயம்).

**தரம் - 12, 13 - கட்டுரை**

இ.ரதிதேவி (யா/கனகரத்தினம் (ம.ம.வி).

**தரம் - 12, 13 - கவிதை**

வி.ஜெயசங்கீதா (யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்) (10) (தொடரும்....)

## குறிகாட்டுவான்...

வாழும் மக்கள் தாம் கொழும் புக்கான போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் இச்சேவையை தொடங்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கையினை முன் வைத்திருந்தனர்.

இதனடிப்படையில் போக்கு வரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியதன் அடிப்படையில் இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய யாழ்.சாலைக்கு புதிய பேருந்துகள் தருவிக்கப்பட்டன.

இந்நிலையில் குறிகாட்டு வானிலிருந்து கொழும்புக்கான பேருந்து சேவை சுபநேரத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட அதேவேளை, சம்பிரதாய பூர்வமாக அமைச்சர் முதலாவது பயணச் சீட்டையும் பெற்றுக்கொண்டார். இதன்போது அங்கு கூடியிருந்த தீவக மக்கள் குறித்த சேவையை ஆரம்பித்து வைத்த அமைச்சருக்குத் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

குறித்த பேருந்து நாள்தோறும் மாலை 6.30 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து புற்ப்பட்டு ஊர்காவற்துறை, யாழ். பேருந்து நிலையம் குருநாகல் பாதை வழியாக கொழும்பு புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை ஊடாக இரத்மலானையைச் சென்றடையும்.

இதேவண்ணம் இரத்மலானையிலிருந்து இரவு 8.00 மணிக்கு பயணிக்கும் பேருந்து குறித்த பாதை வழியாகப் பயணித்து குறிகாட்டுவானைச் சென்றடையும். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது முயற்சியால் கிடைக்கப் பெற்ற இச்சேவை மூலம் தீவக மக்கள் அதிக நன்மைகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சிவராசா (போல்), இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் குலபாலச்செல்வம், வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சங்க தலைவர் புவி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## வடக்கிற்கான...

ஆரோக்கியமானதல்ல. பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பினால் அசௌகரியங்கள் ஏற்படக்கூடும்.

குறிப்பாக உறவுகளை பார்வையிடுவதற்கு வடக்கிற்குப் பயணிக்கும் போது பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற கட்டுப்பாடு, வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களைப் பாதிக்கும். பாதுகாப்பு அமைச்சின் இந்தக் கட்டுப்பாடு சுற்றுலாப் பயணிகள் மற்றும் முதலீட்டாளர்களையும் பாதிக்கும். பயண கெடுபிடிகளினால் வடக்கு தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றதாகவே அர்த்தப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மக்களை...

அதிகாரப் பகிர்வானது முழு இலங்கையில் இடம்பெற வேண்டும் என நாங்கள் கேட் கின்றோம். மலையக, முஸ்லிம் மக்களுக்காகவும் நாங்கள் குரல் கொடுக்க வேண்டியுள்ளது. தாயகத்தைப் பாதுகாக்க இஸ்லாமிய தலைமைகளுடன் சேர்ந்து தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கவுள்ளோம்.

மாகாணத்தில் சுயாட்சியும் மத்தியில் அதிகாரப் பகிர்வும் எமக்கு கிடைக்க வேண்டும். தமிழர்களின் போராட்டம் ஆயுதப்போராட்டம், பயங்கரவாதப் போராட்டம் என சொன்ன சர்வதேசத்துக்கு, நாம் எமது பிரச்சினையை தெளிவாகச் சொல்ல வேண்டும்.

1961ஆம் ஆண்டு நாம் சாத்வீகப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். அதன்மூலம் அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைத்தோம். அந்தப் போராட்டத்தைத் தடுக்க பொலிஸ் மட்டுமே இருந்தது. இன்று அந்த நிலைமை இல்லை. இராணுவப் புல்னாய் வாளர்கள் போராட்டங்களை தடுக்க முயல்கின்றார்கள்.

எனவே இதுபற்றிச் சிந்திக்க முதல் பரந்துபட்ட கலந்து ரையாடலை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புலிகள்...

எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 9.45 மணிக்கு வெள்ளவத்தை மிலாஜ் ஹோட்டலில் இருந்து இதன் ஆரம்ப நடவடிக்கை முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் பின்னர் நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு கையெழுத்திடுவதற்கான அவகாசத்தை வழங்கவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## கூட்டமைப்பு....

முதலமைச்சர் இதுபோன்ற கருத்துக்களை பொது இடங்களில் தொடர்ந்தும் முன்வைப்பார். ஆனால், அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களிலும், நிகழ்வுகளிலும் எதிர்காலத்தில் புறக்கணிப்புச் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

இது தொடர்பில் எதிர்வரும் மாதம் இடம்பெறும் கூட்ட மைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எமது கண்டனத்தையும், அதிருப்தியையும் தெரிவிக்க இருக்கின்றோம்.

இரு வாரங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலும் அங்கத்துவக் கட்சிகளான இயக்கங்களுடன் தான் இணைந்து செயற்பட முடியாது என, விடுதலைக்குப் போராடி ஜனநாயக வழிக்குத் திரும்பிய கட்சிகளைப் பார்த்து கூறிய முதலமைச்சர், கடந்த வெள்ளிக்கிழமை புளியங் குளத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவை நிகழ்விலும், இயக்கங்கள் சுயநலத்துக்காகவே போராடியதாகவும், தனது நீதிமன்றத்தை அவர்களே எரித்தார்கள் என்ற குற்றச் சாட்டுக்களையும் அடுக்கிச் சென்றார்.

எந்த ஒரு விடுதலை இயக்கமும், போராளிகளும், தமது சொந்த நலனை முன்நிறுத்தி போராடவில்லை. தனது இனத்தின் விடுதலைக்காக ஒரு உயர்ந்த இலட்சியத்துக்காக போராடியவர்களை கொச்சைப்படுத்தி அற்பத்தனமாக உரையாற்றியுள்ளார் முதல்வர் ஆயுதப் போராட்டத்தில் சிந்திய இரத்தத்தாலும் தியாகங்களாலுமே இந்திய-இலங்கை ஒப்பந்தமும், 13ஆவது திருத்தச்சட்டமும் அதனூடாக மாகாண சபை முறைமையும் கொண்டுவரப்பட்டது.

அதன் மூலமே முதலமைச்சர் என்ற உயரிய அந்தஸ்தும், கௌரவமும் விக்னேஸ்வரன் ஐயா அவர்களுக்கு கிடைத்தது. முதலமைச்சரின் கருத்துக்கள் பரமசிவன் கழுத்தில் இருந்து கொண்டு கருடா சௌக்கியமா? எனப் பாம்பு கேட்பது போல் இருக்கின்றது. வன்முறையாளர்களுடன் சுயநலமிகளுடன் ஆட்சியில் பங்கு கொள்வது முரண்பாட்டு நிலையை தோற்றுவிக்கவில்லையா?

இதன் உள்ளார்ந்த அர்த்தம் தான் என்ன? ஒரு இனத்தின் விடுதலைக்காக உயிரை துச்சமென நினைத்து உண்மையான விடுதலைக்கு இலட்சியத்தோடு போராடியவர்கள் வன்முறையாளர்களோ அல்லது சுயநலவாதிகளோ இல்லை. ஆயுதப் போராட்டம் தோற்றுப்போனதற்காக போராட்டத்தை முதலமைச்சர் நலினப்படுத்தக்கூடாது.

வடமாகாண சபையின் முதன்மை அமைச்சர் யார் என்பதனை ஆயுதம் தரித்து போராடிய தமிழ் இயக்கங்களும், மக்களுமே தீர்மானித்தனர் என்பதனையும் எதிர்காலத்திலும் தீர்மானிப்பார்கள் என்பதையும் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இதுபோன்ற உரைகளினால் பொது எதிரிக்கான எமது எதிர்ப்பு போராட்டங்கள் வலு இழந்து செல்லும் ஆபத்தும் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அகிம்சைப்...

உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். வைக்கோல் பட்டடை நாய்கள் என எம்மை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சித்தரித்துள்ளார். அந்த நிலையில், தமிழ் மக்களுக்கான இனப் பிரச்சினைத் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு தமிழ், முஸ்லிம், மலையக மக்களை ஒன்றிணைத்து அகிம்சைப் போராட்டத்தினை முன்னெடுக்க வுள்ளதாக கூறினார்.

நீண்ட நேரத்திற்கு பேசிய மாவை சேனாதிராஜா சுபாஸ் சந்திர போஸ் மற்றும் மகாத்மா காந்தி ஆகியோர் அகிம்சைப் போரினை முன்னெடுத்து பல வெற்றிகளை கண்டுள்ளனர். பல்வேறு இடையூறுகளின் மத்தியில் தமது போராட்டங்களின் மூலம் வெற்றி கண்டுள்ளனர்.

அந்த வகையில், தமிழ் மக்களின் காணி அபகரிப்பு மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றுடன், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வினை பெற்றுக்கொள்வதற்கு அகிம்சைப் போராட்டத்தினை முன்னெடுக்கப் போவதாக கூறினார்.

எனவே அனைவரும் சிந்தித்து அகிம்சைப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தார். (25)

# ஜனாதிபதி 3 ஆவது முறை போட்டி எவரும் குழம்பத் தேவையில்லை

## என்கிறார் டலஸ்

ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாவது முறையாக மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட முடியாது என முன்வைக்கப்பட்டு வரும் வாதங்கள் குறித்து குழப்பமடையத் தேவையில்லை என அமைச்சர் டலஸ் அழகபெரும தெரிவித்துள்ளார்.

அக்குரெஸ்ஸ பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த வாதத்தை அவர் நிராகரித்துள்ளார்.

இந்த வாதம் தொடர்பான விடயத்தில் ஜே.வி.பியும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அமுலில் உள்ள சட்டத்திற்கு அமைய மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறையாக போட்டியிட முடியுமா, முடியாதா என்பதை தேர்தல்கள் ஆணையாளரே தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இ.போ.ச. பஸ்கள் மீது நேற்றிரவும் கல் வீச்சு

வவுனியாவில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் மீது கல்வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இரவு 7.30 மணியளவில் முள்ளிப் பகுதியில் வைத்து இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கல்வீச்சில் ஒரு பஸ் சேதமடைந்தது. வவுனியாவில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பஸ் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியவர்கள் சற்றுத் தொலைவில் பின்னால் வந்து கொண்டிருந்த மற்றைய பஸ் மீதும் தாக்குதல் நடத்தினர் இதில் முன்னால் சென்ற பஸ் சேதத்துக்குள்ளானது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே தாக்குதலை மேற்கொண்டனர் என பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் விசுவமடுவில் வைத்து இ.போ.ச. பஸ்மீது மேற்கொள்ளப்பட்ட கல்வீச்சுத் தாக்குதலில் சாரதி காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# வறட்சிகால அனர்த்தத்தை தடுக்க கிளிநொச்சிக்கு 60 மில்.கிடைத்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்கால வறட்சி நிலைமைகளின் போது ஏற்படும் அனர்த்தங்களை தவிர்க்கும் வகையில் விசேட வேலைத் திட்டங்களின் தேவைகளை கருதி நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான முருகேசு சந்திகுமாரின் வேண்டுகோளுக்கிணங்க நிதி அமைச்சிடமிருந்து 50 மில்லியன் ரூபாவும், அனர்த்த முகாமைத்துவ அமைச்சிடமிருந்து 10 மில்லியன் ரூபாவுமாக 60 மில்லியன் ரூபா கிளிநொச்சிமாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த நிதியினைக் கொண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் முன்மொழியப்பட்ட பணிகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்யும் வகையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதனடிப்படையில் குடிநீர், சிறுகுளங்கள் புனரமைத்தல், பொதுக் கிணறு அமைத்தல், கால்நடைகளுக்கான குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைத்தல், உவர் தடுப்பு அணை அமைத்தல் உள்ளிட்ட பல பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்த வகையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் 10 மில்லியன் ரூபாவில் 9 மில்லியன் ரூபா சிறு குளங்கள் புனரமைப்புக்கும், ஒரு மில்லியன் ரூபா நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் தலா ஒவ்வொரு தண்ணீர் தொட்டிகள் அமைப்பதற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் புனரமைப்புக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள சிறுகுளங்களாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் இயக்கச்சி நொச்சிக்குளம், தர்மக்கேணி வண்ணான்குளம், கச்சார்வெளி கோவில்குளமும், பூநகரி பிரதேசத்தில் செட்டியாகுறிச்சி காகம் பீச்சிகுளம், பள்ளன்குளம், கௌதாரிமுனையில் குஞ்சுகுளமும் நல்லூர் வன்கேரியன்குளமும், ஜெயபுரம் வடக்கில் வீரமோட்டைகுளமும், கரைச்சி பிரதேசத்தில் கிருஸ்ணபுரம்குளமும் புனரமைக்கப்படவுள்ளது.

இதேவளை நிதி அமைச்சின் 50 மில்லியன் ரூபாவில் பச்சிலைப்பள்ளியில் 30 பொது கிணறுகளை புனரமைக்க 11.3 மில்லியன் ரூபாவும், கரைச்சி பிரதேசத்தில் 23 பொது கிணறுகளுக்கு 5.2 மில்லியன் ரூபாவும், கண்டாவளையில் 22 பொது கிணறுகளுக்கு 8.3 மில்லியன் ரூபாவும், பூநகரியில் 11 பொது கிணறுகளுக்கு 2.5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு, மேலும் பூநகரியில் ஏழு கிலோ மீற்றர் உவர் நீர் தடுப்பு அணை அமைக்க 3.5 மில்லியன் ரூபாவும், ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கண்டாவளையில் சிறுகுளங்களாக முரசுமோட்டை மருதம்குளம், தட்டுவன்கொட்டி பறவைகுளம், மற்றும் அம்மன்குளம், பிரமந்தனாறு நெடும்குளம் ஆகியவற்றுக்கு 8 மில்லியன் ரூபாவும், பூநகரியில் முட்கொம்பன், செட்டியாகுறிச்சி, ஞானிமடம் ஆகிய பிரதேசங்களில் உள்ள சிறுகுளங்கள் புனரமைக்கு 4.7 மில்லியன் ரூபாவும், கரைச்சி பிரதேசத்தில் சிறுகுளங்களான புதுஜயங்கன்குளம், ஜயங்கன்குளம், கந்தன்குளம் ஆகியவற்றுக்கு கீழான நீர்பாசன வாய்க்கால் புனரமைக்கு 6.5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் பணிப்புரைக்கு அமைவாக வரும் டிசம்பர் மாதத்திற்குள் மேற்படி பணிகளை நிறைவு செய்யும் வகையில் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# ஆதரவுக்கான பிரதியுபகாரங்களை அடைய முடியாமல் போய்விட்டது

## சம்பிக்க ரணவக்க கவலை



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கியமைக்காக அடைய வேண்டிய அனைத்து தேவைகளையும் அடைய முடியாது போனமை பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கில் சிங்கள குடும்பங்கள் அவர்களின் நிலங்களில் மீள்குடியேற்றப்படவில்லை. யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் சிங்கள சமூகம் அமைதியின் பலனை இன்னும் அனுபவிக்க முடியவில்லை.

அரசாங்கத்தின் தவறுகளை விமர்சிக்கும் உரிமை ஜாதிக ஹெல உறுமயவிற்கு உண்டு. ஏனெனில் 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதில் ஜாதிக ஹெல உறுமயவிற்கு பெரும் பங்கு உண்டு.

ஈழ கோரிக்கை கைவிடுமாறு தற்போதல்ல, கடந்த வருடம் நடத்தப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஈழ கோரிக்கையை கைவிடுமாறு ஜனாதிபதி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு நிபந்தனை விதித்திருக்க வேண்டும்.

கடந்த வருடம் ஸ்தாபிக்கப்பட்ட வடக்கு மாகாண சபை தற்போது தனிநாட்டை நோக்கிய வேலைகளை செய்து வருகிறது.

யுத்தம் முடிவடைந்த போதும் இந்தப் பிரச்சினையில் இருந்து நாடு விடுவிக்கப்படவில்லை என்று ஜாதிக ஹெல உறுமய கருதுகிறது. இதனால், நாட்டின் உண்மையான சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் தலைவர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவை.

அரசாங்கம் கதாநாயகனாக நடிக்க முயற்சிப்பதை நிறுத்தி விட்டு, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், கடந்த மாகாண சபைத் தேர்தல்களில் வாக்குகள் குறைந்தமைக்கான காரணங்களை கண்டறிய வேண்டும் என்றார்.

# ஜனாதிபதி - ஹெலஉறுமய இன்று முக்கிய சந்திப்பு


(கொழும்பு)

திடீர் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சர்ச்சை ஏற்படும் வகையில் கருத்துக்களை தெரிவித்து வரும் அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குமிடையில் இன்று மாலை பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.

ஜாதிக் ஹெல உறுமயவின் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தை நிச்சயமாக இடம்பெறுமெனத்தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்த ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே அரசுக்கு அறிவித்துள்ளோம். இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையை முக்கியமானதாக கருதுகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் கொட்டியது மீன் மழை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று அதிகாலை பெய்த மழையுடன் மீன்களும் விழுந்துள்ளன. குடாநாட்டில் பரவலாக பருவமழை பெய்துவருகிறது. இதன் ஒரு பகுதியாக வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயப்பகுதியில் மீன் மழை பெய்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

நேற்று அதிகாலை வீரமாகாளி அம்மன் கோவில் பகுதியில் பெய்த மழையின்போது 30 தொடக்கம் 40 வரையான மீன்கள் மழையுடன் விழுந்துள்ளன. கறுப்பு நிறத்தில் இருந்த சிறிய மீன்களை பார்வையிட அப்பகுதியில் மக்கள் திரண்டிருந்தனர். இச்சம்பவம் தொடர்பாக நேரில் கண்டவர்கள் கருத்துத்தெரிவிக்கையில்,

அதிகாலைவேளை ஆலயத்தின் பிரதமகுரு அருகில் இருந்த தனது வீட்டில் இருந்து ஆலயத்தை நோக்கிச் சென்றுள்ளார். இதன் போது ஆலயத்தின் முன்பகுதியில் சில மீன்கள் துடித்துக் கொண்டு இருப்பதை அவதானித்துள்ளார்.

இதன் பின்னர் அயலில் உள்ளவர்களை அழைத்துக் கொண்டு அப்பகுதியை முழுமையாக அவதானித்துள்ளார். .இதன் போது அப்பகுதியில் உள்ள தேர் முட்டியடியில் தேங்கி நின்ற மழை வெள்ளத்தில் ஏராளமான மீன்கள் காணப்பட்டதை அவதானித்துள்ளனர்.

அதே போன்று ஆலயத்தின் முன்பகுதியிலும் அதிகளவான மீன்கள் துடித்துக்கொண்டு இருந்துள்ளன. மழையுடன் சேர்ந்து மீன் விழுந்த சம்பவம் தொடர்பாக கதை தெரிந்த பலர் அங்கு வந்து மீன்களை பார்வையிட்டுச் சென்றிருந்தனர்.

இதன் பின்னர் அங்கிருந்த சில மீன்கள் பொது மக்களால் பிடித்துச்செல்லப்பட்டதுடன், பறவைகளும் தூக்கிச் சென்றுள்ளன.

# ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவு தகவலை மறுக்கும் முஸ்.காங்கிரஸ்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கவுள்ளதாக வெளியான தகவலை, அக்கட்சி மறுத்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் சகோதரரும் பேச்சாளருமான ஹபீஸ் இந்த தகவலை உள்ளூர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ளார்.

சில இணையத்தளங்களில் ராஜபக்ஷவுக்கு, முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவளிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதில் எவ்வித உண்மையுமில்லை. இந்தநிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது குறித்து கட்சி உறுப்பினர்களை ஆலோசித்தே தீர்மானம் எடுக்கப்படும் என்றும் ஹபீஸ் குறிப்பிட்டுள்ளார்.

# போதைப்பொருள் கடத்தல் இரு இலங்கையர் கைது

சர்வதேச ரீதியில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய இரண்டு இலங்கையர்களும் இந்தியப்பிரஜை ஒருவரும் சென்னையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுடில்லி போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் சென்னை பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 17 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னை பூந்தமல்லி பகுதியிலுள் வீடொன்றில் வைத்து சந்தேகநபர்களால் போதைப் பொருள் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக புதுடில்லி அழைத்து செல்லப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர் பில் புதுடில்லி போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினர் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.